674

No. M.2210


ஆசிரியர் : வை. மு. கோதைநாயகி அம்மாள்

# JEGAN MOHINI

# ஜகன்மோகினி

மலர் IV April 1927 இதழ் 4

29 APR 1927



வருஷ சந்தா ரூ. 1-8-0

JL
ᴎ211,N22 JM
M27 . 4·4 .
182833

மோகினி ஆபீஸ்,
26 தேரடித் தெரு,
ருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித்தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

# ஜகன்மோகினி.

இது ஓர் மாதாந்த சஞ்சிகை. இதன் மூன்றாவதாண்டில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகியம்மாளால் எழுதப்பட்ட "வைதேகி" என்ற அபூர்வத் துப்பறியும் நாவல் வெளிவந்தது. இதன் நான்காவதாண்டில் மேற்படியாரால் இயற்றப்பெற்ற "பத்மசுந்தரன்" என்ற நாவல் வெளிவருகிறது. இச்சஞ்சிகையை எல்லோரும் ஆதரிக்கும்பொருட்டே இதற்கு வருடச் சந்தா உள்நாடு, வெளிநாடு இரண்டிற்கும் ரூபாய் 1 8 0 தான் வைத்திருக்கிறது. மேற்படி குறைந்த சந்தாவுடன் பல அரிய விஷயங்களையும், ஹாஸ்ய விநோதங்களையும், சிறந்த துப்பறியும் நாவல்களையும் தாங்கிவரும் இஜ்ஜகன்மோகினியை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமாய்க் கோருகிறோம்.

நிற்க, இச்சஞ்சிகைக்கு ஐந்து பேர்களை சந்தா சேர்த்துக் கொடுக்கும் நண்பர்களுக்கு ஒரு வருஷ சஞ்சிகையும், 12 பேர்களை சேர்த்துக் கொடுப்பவர்க்கு 1 வருஷ சஞ்சிகையும், வைதேகி 2 பாகங்களும் (தனி விலை ரூ. 2 8 0) இனாமாக அனுப்பப்படும். சஞ்சிகையை வி. பி. யில் அனுப்பினால் அதிகமாக 3 அணா செலவாகுமாகையால், வேண்டியவர்கள் தயவுசெய்து மணியார்டர் அனுப்புவதே உசிதம்.

எமது சந்தாநேயர்களுக்கு "வைதேகி" விலை ரூ. 2 0 0

"ஜகன்மோகினி" ஆபீஸ்.
26 தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

## விஷய அட்டவணை.


| | | |
|---|---|---|
| 1 | கடவுள் வணக்கம் | |
| 2 | ஸ்ரீதன்வந்தரி அவதாரம் | திரு. ராகவாசாரியர். |
| 3 | ஹாஸ்யத்துணுக்குகள் | வை. மு. கோதை நாயகி |
| 4 | மதிப்புரை | பத்திராதிபர் |
| 5 | அமிர்தமாலினி | வ. கிருஷ்ணஸ்வாமி சர்மா |
| 6 | பத்மசுந்தரன். | வை. மு. கோதை நாயகி |


## சந்தா நேயர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

நமக்கு எழுதும் கடிதங்களில் சந்தா நம்பரை மறக்காமல் தெரிவிக்கவேண்டும்.

இடம் மாறும் சந்தா நேயர்கள் நமக்கு புது விலாசத்தை 25 தேதிக்குள் தெரிவிக்காவிடில் அவர்களது பழைய விலாசத்திற்கே சஞ்சிகை அனுப்பப்படும். இதனால் ஏற்படும் தவறுதலுக்கு நாம் பொறுப்பாளியல்ல.

## எமது சந்தா நேயர்களாகிய
## அன்பார்ந்த சகோதர சகோதரிகளுக்கு விக்ஞாபனம்.

REGISTRAR OF BOOKS
29 APR 1927
MADRAS

*அருந்தமிழ்த் தாயின் அருமைமக்களே!*

"ஒன்றை நினைக்கினது வொழிந்திட் டொன்றாகு
மன்றியது வரினும் வந்தெய்து—மொன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கு
மெனையாளு மீசன் செயல்."

என்று ஆன்றோர் கூறியுள்ளதை ஒவ்வொன்றிலும் நிதர்சனமாக எமது சொந்த அனுபவத்தில் கண்டறிந்துள்ளோம். எமது பத்திரிகையை 15-தேதிக்கு மாற்றிக்கொள்ள வேண்டிய முயற்சியைச் செய்து வருகையில், ஏற்கெனவே பத்திரிகைகள் மூலமாய்த் தெரிவித்தபடி, எதிர்பாராவிதமாய் கடுமையான நோயினால் இவ்விரண்டரை மாதகாலமும் அவஸ்தைப்பட்டதனால் எமது 4-வது சஞ்சிகையை குறித்த நேரத்தில் வெளியிடயியலாது தடைபட்டுப் போனதைப் பற்றி மிகவும் வருந்துகிறோம்.

"அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா—தொடுத்த
உருவத்தா னீண்ட வுயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா."

என்கிறபடி நாம் நம்மாலான வரையில் நமது பத்திரிகையையும் "சண்பகபுவனா"வையும் விரைவில் முடித்து வெளியிடப் பிரயத்தனப்பட்டும், நல்லவேளை வாராமல் போய்விட்டது. நாம் முயலும் வேளையில் கடவுளுடைய கருணையும் கூடியிருக்குமாயின் காரியம் வீரியமாகக் கைகூடுகின்றது. கடவுள் கடைக்கண் நோக்கமில்லாத வேளையில் நாம் முயன்றும் பயனற்றுவிடுகின்றது. கிரமமாக நாம் 6-வது பத்திரிகை வெளியிடும் காலத்தில் 4-வது பத்திரிகை வெளியிட நேர்ந்தது கடவுளின் கூத்தன்றோ! கடுமையான நோயினால் பீடிக்கப்பட்டமையால் இன்னமும் எனது தேகம் பழைய நிலைமைக்கு வருங்காலம் நெருங்காமல் கேவலமான பலஹீன மேற்கொண்டிருக்கிறது. என்னுடைய சொந்த வேலைகளை நான் செய்துகொள்வதே வெகு கஷ்டமாக இருக்கிறது என்றாலும், இதுகாறும் பொறுமையுடனிருந்த நமது சந்தா நேயர்களின் ஆவலைச் சிறிதாகிலும் தணிக்கும்பொருட்டு நம்மாலான

வரையில் பிராணனைப் பிடித்துக்கொண்டாகிலும் சில பாரங்களேனும் அச்சிட்டு அனுப்பி திருப்தி செய்வித்து அவர்களுடைய ப்ரேமைக்கு நமது பத்திரிகையைப் பாத்திரமாக்கும்பொருட்டு எம்மால் கூடிய வரையில் கதையைத் தொடங்கி எழுதி வெளியிட்டுள்ளோம். நமது நண்பர்கள், எனது தேக நிலைமையை அறிந்து, பத்திரிகையை ஏற்றுக் கொள்வார்களென நம்புகிறேன்.

எமது தேக நிலைமையின் நிமித்தம் பத்திரிகையின் தாமதத்தை நமது சந்தா நேயர்களுக்கு அன்புடனறிவித்த "சுதேசமித்திரன்" "இந்து" இந்துநேசன் முதலிய பத்திரிகைகளுக்கு எமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இதுகாறும் சந்தா நேயர்கள், பத்திரிகையின் தாமதத்தை நோக்கி அன்புடன் பொறுமையா யிருந்ததற்காக நாம் எவ்வாறு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வது என்பதை யறியாது தியங்குகின்றோம். எனது தேகநிலைமையை யறிந்த சந்தா நேயர்களில் பலர் நமக்கனுப்பிய அனுதாபக் கடிதங்களுக்கெல்லாம் தனித்தனி பதிலளிக்கவியலாது பற்றி இப்பத்திரிகையின் வாயிலாக அவர்களுக்கு எமது நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன் எந்நாளும் அவர்களுடைய பிரியம் பத்திரிகையின்மீது மாறாமலிருக்கும்படி வேண்டுகிறோம். இந்நான்காவது சஞ்சிகையில் சித்திரப் படம் சேர்த்து வெளியிடுவதாகத் தெரிவித்த எமக்கு எதிர்பாரா இடையூறுகளினால் சேர்க்க சாத்தியப்படாது போனதுபற்றி வருந்துகின்றோம். நம்மாலியன்றமட்டும் 5-வது சஞ்சிகையை இம்மாதக் கடைசித் தேதிக்குள் வெளியிடவேண்டிய முயற்சியை இப்போது முதலே எடுத்துக்கொண்டு வேலையை நடத்த ஏற்பாடு செய்திருக்கின்றனம். வேளையின் பயனால் எதையும நாம் முன்னால் கூறுவது பிரயோஜனமற்றதாக அனுபவத்தில் தெரிந்து வருகிறபடியால் நம்முடைய யத்தனப்படி முயன்றாலுங்கூடக் கடவுளின் கருணை எவ்வாறிருக்கின்றதோ வறியோம். அவ்வித இடையூறுகளால் தாமத மேற்படுமாயின் மன்னிக்கும்படி இறைஞ்சிக் கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்: தங்கள் சகோதரி,

வை. மு கோதை நாயகி

More Opinions about "VAIDHEHI"

# "SWARAJYA".

(22-1-1927)

The second daughter of a Zemindar, the eponymous heroine of this clever detective story is at two years of age stolen away by an old hag; and the story opens in her sixteenth year when the old hag claiming to be the heroine's grand mother, paints for her the charms of prostitution. A high spirited girl, whose chastity is her deepest instinct, successively braves and overcomes every snare set in her path, and marries finally, after a marvellous rediscovery of her real parentage, a Zemindar who turns out to have been the husband of her own dead sister, and whom she meets and loses under tragic circumstances in the opening pages of the story. The plot is very skilfully woven.

The authoress's hit at almost every profession lends a sombre significance to Shaw's genial dictum that the professions are all so many conspiracies againt the laity. We commend this book heartily and shall look forward with pleasure to other works from this authoress.

---

## நச்சினார்க்கினியன்.

(Jan 1927)

வைதேகி என்னும் பெயர் வாய்ந்த (நாவல்) நவீனகத்தின் பாகங்கள் இரண்டினையும் பார்வையிட்டோம். இவற்றை இயற்றிய ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகியம்மாள் இவற்றை இனிய எளியநடையில் தெளிவாய்எழுதியமை குறித்து மகிழ்கின்றோம். எத்தகைய இடர்ப்பாடுகள் உற்றாலும் மகளிர் தம் கற்புநிலையிற் சிறிதும் கலங்காது திண்ணியோராய் நிற்றல் பெரிதும் வற்புறுத்தப்பெற்றமை இந்நூலின் மேம்பாட்டுக்கு ஒரு சீரியசான்றாம். நாவல் துப்பறியும் திறனும், அழகும் அமைந்துள்ளது. இடையிடையே கவிச்சக்ரவர்த்தியாராகிய கம்பர் முதலியோர் பொருள்பொதிந்த அருங்கவிகள் ஏற்ற பெற்றி மேற்கோளாக அமைக்கப்பெற்றுள்ளன. அவை நீதிகளைப் படிப்போர் உள்ளத்தில் அழுந்தப் பதிப்பனவாயுள்ளன. தீவினை நயந்து செய்யும் தீயர்கள் தீப்பயனைத் தவறாது அடைதல் நன்கு விளக்கப்பட்டுள்ளது. பொதுவாக மகளிர் கல்விப்பயனால் எய்தும் கற்பொழுக்க மாண்புகள் இதில் செவ்விதின் அமைந்துள்ளமை காணக் கற்போர் யாவரும் பெரிதும் மகிழ்வர். கதைப்போக்கும் மனத்திற்குச் சலிப்பினைத் தாராமல், மனவெழுச்சியைத் தருவது, இதன் மற்றொரு சிறப்பாகும். இத்தகைய நவீனகங்களே படிப்போர்க்கு நற்பயனுறுவிப்பன என்பது எம் அபிப்பிராயம்.

பத்திராதிபர்.

ஓம்:

ஸ்ரீ பாலகணபதி அருள் நிற்க.

சென்னை "ஜகன்மோகினி" சஞ்சிகையின் ஆசிரியை
திருச்செல்வி - கோதைநாயகி அம்மையாருக்கு
மணப்பாறை "திராவிடசங்க"க் காரியதரிசியும்
"பார்ப்பனரல்லாத இளைஞர் சங்க"க் காரியதரிசியும்
"ரஞ்சிதம்" சஞ்சிகையின் ஆசிரியருமான,

## திரு. கே. என். நாராயணசாமிப் பிள்ளை அளித்த

# நற்சாக்ஷிப் பத்திரம்.

திரு. கோதை நாயகியாரை ஆசிரியையாகக் கொண்ட "ஜகன் மோகினி" சஞ்சிகையில் வெளியான "வைதேகி' என்னும் நாவலை நான் நுணுகிப்படித்து அறியும் காலை எமது உள்ளம் அவரது எழுதுகோலை நினைத்து நினைத்துக் கசிந்து புளகாங்கித முற்றது. அந்நவீனகத்தைப்படித்த பின்னர் திரு. நாயகியாரின் எழுதுகோல் முத்துப்போன்ற எழுத்துக்களைச் சொரியும் சித்திரக்கோல் என்பதை அறிந்தேன். அவரது தமிழோ இனிய சுவைசொட்டும் தீந்தமிழ்; நடையோ வீரமும் வியப்பும் கொண்டது. வைதேகி நவீனகத்தின் ஒவ்வொரு ஏட்டிலும் உலகானுபவச்சாறு சொரிந்து ஓடுகிறது. இருபாலருக்கும் இருபெறும் கூட்டத்திற்கும் நல்லொழுக்கத்தை ஊட்டுவதுமான இத்தகைய நவீனம் எழுதி அதன் வாயிலான் தமிழ் அன்னைக்கும், தமிழ் நாட்டுக்கும், தமிழ்ச் செல்வி செல்வர்கட்கும் தொண்டியற்றும் அவரது கருத்தை நிறைவேற்றவும், தமிழகத்தின் நல்லறத்தை நாட்டிற்கு ஊட்டவுமான நன்னூல் பல ஆக்கவுமான துறைக்குதவ திரு. நாயகியாருக்கு நீடிய ஆயுளை நல்குமாறு எங்கும் வியாபித்து நிலவும் பராசக்தியை இறைஞ்சுகின்றேன்.

2—2—27 } இங்ஙனம்,
மணப்பாறை. } கே. என். நாராயணசாமிப் பிள்ளை.

உ

ஓம்

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

*திருவள்ளுவர்.*

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து

| மலர் IV | அக்ஷய ஹூ பங்குனி மீ March 1927. | இதழ் 4 |
|---|---|---|

## கடவுள் வணக்கம்.

உளனெனில் உளன் அவனுருவம் இவ்வுருவுகள்
உளனலனெனில் அவனுருவம் இவ்வருபுகள்
உளனென இலனென இவைகுண முடைமையில்
உளனிருதகைமையொடு ஒழிவிலன் பரந்தே.

*திருவாய்மொழி.*

## திருமால் துதி

வண்டமர் குழல் வாணுதல் ஒடு
திண்டிறலுடைத் திருவிளையவன்
அன்போவேர வரணிய மதில்
புன்குரங்கொடு புரிந்தண்பினன்
வாரணி கடல் வள நகரியில்
தாரணி முடித் தானவன் விழத்
தெய்வக் கணை யெய்து புகழ்
மெய்வீடணன் வியன்மா முடி
சூடும்படி துணை நின்றவன்
நீடும்புகழ் நிறை ராகவன்
தேனுறை மலர் தெய்வக் கழல் நாளும்
வந்தனை செய்து மகிழ்வோர்
பந்தனை யறுக்கும் பண்புடையோரே

**ஸ்ரீ வீரராகவ கவி.**

## ஸ்ரீ தந்வந்தரி அவதாரம்

முந்திய வானில் முறைமுறை பணிந்து
எந்தாய் போற்றி இறைவா போற்றி!
நந்தா துலகம் நயந்தாய் போற்றி!
துன்புறு மெந்துயர் துடைத்தாய் போற்றி!
அன்பர்க ளிதயத் தமர்ந்தாய் போற்றி!
ஆரணங் காணு வடியாய் போற்றி!
வாரணங் கண்டருள் வானவா போற்றி!
உலகெலாம் படைக்கும் உத்தமா போற்றி!
அலகிலா வுயிரெலாம் அளிப்பாய் போற்றி!
செந்திரு நாயக தேவர் பிரானே!
வந்தரு ளெங்கள் வள்ளலே போற்றி
என்று விண்ணோரு மெழிலுடை முனிவரும்
துன்றிய அன்பால் தொழுந்தொறு மவர்க்குக்
கருணை புரிந்தருள் கார்முகில் மேனித்
தந்வந் தரியே தண்ணரு ளமுதே
கன்மந் தொலைக்குங் கமலைக் கிறையே
சுச்ருதர் முதலாத் தூயவர்க் காயுணூல்
நச்சிட வருளும் நாயகா போற்றி
சத்திர முதலாத் தருமஷ் டாங்கம்
வைத்திடும் வைத்திய வள்ளலே போற்றி
வரையறு மருத்துநூல் வளம்பெற வேண்டிப்
புரையற வுணர்த்தும் புங்கவா போற்றி
உலகத் திருளா மோங்குநோய் நொடியினில்
இலகுற தொழிக்கு மேந்தலே போற்றி
ஆயுணூல் வல்லார்க் கரும்பெறற் குருவாய்
வாயும் நன்மணியே வனசத் தாளிணை
சிரமிசைக் கொண்டுநற் சீர்பெற வாழ்த்துவாம்
தரைமிசை யாருந் தவறிலாது உய்கென.

### நேரிசை வெண்பா

தன்வந் தரியுருவங் கொண்டு தடங்கட லுள்
முன்வந்து தோன்று முழுமுதலை—மின்வந்
தொளிருங் கருமுகிலை யுள்ளத்தி னுள்ளே
களிவந்த நல்லமுதைக் காண்.

திரு. ராகவாசாரியர்.

ஸ்ரீ தந்வந்தரி வரலாறு
முற்றும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182833.
NLV
A33 4.4

## ஹாஸ்யத் துணுக்குகள்.

(1) பையன்:—அப்பா! நானினிமேல் பள்ளிக்கூடத்திற்குப் போகவே மாட்டேன்.

தகப்பனார்:—ஏனடா போகமாட்டேனென்கிறாய்?

பையன்:—வாத்யாருக்கு புத்தியில்லையப்பா! நேற்றுதினம் நம்முடைய விசாலாக்ஷிக்கு விவாகமாயிற்று. நான் அதே நினைவாகச் சந்தோஷமாய் லட்டு ஜிலேபி தின்றதை எண்ணிச் சுபமாக மகிழ்ந்திருக்கையில் வாத்யார் எதையோ என்னை எழுதச்சொன்னார். நான் எழுதிக் காட்டினேன். அதைப்பார்த்த வாத்யார் எழவாயில்லை என்றும் நான் எழுதியது பயனில்லை என்றும் கூறினாரப்பா! நான் கல்யாணத்தை எண்ணியிருக்க எழவு என்கிறாரே. அது தப்பிதமல்லவா?

தகப்பனார்:—நல்ல புத்திசாலித்தனமாகத்தான் படிக்கிறாய்.

* * * *

(2) புருஷன்:—ஏண்டி, இன்று தர்ப்பணம் தொலைக்கும் தினமாமே வாத்யார் தர்ப்பை கொண்டு வந்து வைத்தாரா?

மனைவி:—தாங்கள் காலையில் காப்பி பலகாரம் புசித்துவிட்டு க்ஷவரம் செய்துகொண்டிருந்த சமயம் புரோகிதர் வந்தார். தங்களை இந்நிலைமையில் பார்த்து விடப்போகிறாரே என்று நானப்படியே அவரை அனுப்பிவிட்டேன். அவர் தர்ப்பை வைக்காமல் போய்விட்டார். சென்ற மாஸப்பிறப்பன்று தர்ப்பணம்செய்த தர்ப்பை அந்த ஓட்டின் மீது இருக்கின்றது. சென்ற அமாவாசையைப்போல அதையே எடுத்துச் செய்துவிடுங்கள்.

* * * *

(3) ஒருவன்:—சார் இன்று பாட்டுக்கச்சேரியில் போட்டிக் கச்சேரி நடைபெறப் போகின்றதாமே. அதற்குப் போகவில்லையா?

மற்றொருவன்:—போட்டிக் கச்சேரி என்றால் என்ன சார்?

ஒருவன்:—ஒருவர் வாயிலடித்துக் கொள்ளப் போகிறாராம். இன்னொருவர் வயிற்றில் அடித்துக்கொள்ளப் போகிறாராம். பாடகர் தலையைக் காற்றடித்துக்கொண்டுப் போகப் போகிறதாம். இம்மூன்றும் போட்டியல்லவா?

வை. மு. கோ.

# மதிப்புரை.

## ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்.

### ஸ்ரீ ராம கிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

இப்பத்திரிகையின் அக்ஷயஞூ தைமாதப்பகுதி வரப்பெற்றோம். இதில் பல அரிய கட்டுரைகள் காணப்படுகின்றன. "ஸ்வாமி துரியானந்தரின் சம்பாஷணைகள்" என்னும் வியாஸம் உண்மையான ஞானபக்தி வைராக்கியங்களை உலகத்தாருக்குச் சுலபமாகத் தெரிவிக்கும் தன்மை வாய்ந்துள்ளது. "மாணுக்கர்களுக்கு முறைப்பாடு" என்னும் கட்டுரையானது தற்காலத்து மாணவர்களுக்கு மிகவும் இன்றியமையாததாய் இருப்பதுமல்லாமல் பல அரிய சுகாதார வழிகளை வலியுறுத்துகின்றது. "ஸ்ரீ புருஷசூக்தம்" என்பது, வடமொழி பயின்று அறியாமாந்தர்களுக்கு அது இன்னவிஷயத்தைக் கொண்டுளதென்பதைத் தெளிவாய் விளக்கும். பக்திமார்க்கத்தைப் புகட்டுகின்ற வியாஸங்களும், மனோரம்யமான கதைத்தொடர்களும் இப்பத்திரிகையினிடையே காணப்படுகின்றன.

இவ்வரிய பத்திரிகை எல்லாத் தமிழர்களாலும் ஆதரிக்கத் தக்கதே.

வருட சந்தா உள்நாடு ரூ. 3 0 0 வெளி நாடு ரூ. 4 0 0

---

## நச்சினார்க்கினியன்

### தெப்பகுளம். திருச்சினாப்பள்ளி.

திரிசிரபுரத்தினின்றும், சிறப்புடன் மதிதோறும் வெளிப்போந்துலாவும் இவ்வரிய பத்திரிகையின் 3-வது தொகுதியின் 1-வது பகுதி எம்பார்வைக்கு வந்ததை வந்தனத்துடன் பெற்றுக் கண்ணுற்றோம். அதனுள் அடங்கியுள்ள பல அருமையான விஷயங்கள் படிக்கப்படிக்க மனத்திற்குப் பேரின்பத்தை விளைவிக்கின்றன. "சங்ககாலத்தமிழர் சமயநிலை" என்னும் தலையங்கத்தின் கீழுள்ள விஷயம் மிகவும் ருசிகரமாகவிருக்கின்றது. "தமிழ் இலக்கியம்" என்னும் வியாசத்தை நோக்க அது நம்முடைய ஆதிகாலத்திலிருந்த அருந் தமிழின் பெருமையையும் அக்காலப் புலவர்களின் புகழும் மேம்பாடும் அன்னோராலாக்கப்பட்ட பல நீதிமார்க்கபோதனையை உணர்த்தக்கூடிய நூல்களின் சிறப்பையும் நம் தாய்ப்பாஷை எத்தகையதென்னும் நோக்கத்தையும் நன்கு விளக்குகின்றது. இதுபோன்ற இன்னும் பல்வேறு நல்விஷயங்களையும் கடவுள் வணக்கப் பாக்களையும், கட்டுரைகளையும், மருவிவரும் சொற்களின் உண்மைப் பொருள்களையும் மேற்கொண்டு உலாவும் இப்பத்திரிகையின் ஆசிரியர் பண்டித ம. கோபாலக்ருஷ்ணையராவர். இப்பத்திரிகை மேன்மேலும் தமிழர்களால் ஆதரிக்கப்பட்டு வளர்பிறை மதியம்போல் விருத்தியடையுமாறு மாதவனடிக் கமலங்களைச் சிந்திக்கின்றோம்.

வருட சந்தா ரூ. 2 0 0 வெளி நாடு ரூ. 2 8 0

ஓம்

# அமிர்தமாலினி

## 1-வது அதிகாரம்

### பேயின்வாயகப்பட்ட சேயிழையாள்.

"அடி பட்டீ! காலை முதல் எவ்வளவு நேரம் சமையல் செய்கிறாய்? வீட்டில் நாலுபேர் கூட இல்லை. இவாளுக்கு வேண்டிய அளவு சமையல் செய்ய எவ்வளவு நேரம்? நீ என்ன செய்வாய்? உன் திருட்டு ஆம்படையான் கொடுக்கும் செல்லம். தடிக்கழுதை! உன்னை வெட்டி வெட்டிப் போட்டாலும் பாதகமில்லை. நானும் பார்க்கிறேன். காலை எட்டு மணி முதல் சமையல் செய்கிறாளாம்—சமையல்—என்ன சமையலடி அப்படிப்பட்ட சமையல்? பெரிய சமாராதனைக்குக் கூட இவ்வளவு நாழிகையில் சமையல் செய்து விடலாமே!" என்று ஒரு பெண்பால் ஆர்ப்பரிக்கிறாள். அவளுக்கு வயது இருபத்தைந்து கூட ஆயிராது. பத்தரை மாற்றுத் தங்கத்தையே உருக்கிச் செய்தது போன்ற பளபளப்பான மேனியும், அதற்கேற்ற அதிசொகுஸுடன் அமைந்த அழகிய அவயவங்களும் இவள் "மடமானோ! இரதியோ! மாதர்திலகமோ! வானுலக மங்கையோ!" என்று பிறர்கண்டு வியக்கத்தக்க வண்ணம் அமைந்திருந்தன. அவிழ்த்து விட்டால் தரையைத் தொடத்தக்க கறுத்த கூந்தலும், பிறைச் சந்திரனை போன்ற நெற்றியும், வாள் போன்ற அழகான கண்களும், தக்கதோர் நாசியும், சிவந்த வாயும்—ஆஹா!—சிறுத்த இடையும் சுருக்கிச் சொல்லின் உச்சி முதல் உள்ளங்கால் வரை அவளது ஒவ்வொரு அவயவமும் அதி அழகாயமைந்திருந்தன. அவளது காம்பீர்யமான தோற்றமும், அவள் அணிந்திருந்த விலை மதிக்கொணா நகைகளும் 'இவள் மாநில மங்கையல்லள்—விண்ணோர் விரும்பும் வானுலக மங்கை' என்று கூறும்படிச் செய்தன. அவளது முகத்தில் கலைமகளும் திருமகளும் போட்டிகொண்டு 'நான் முன் நீ முன்' என்று தாண்டவமாடுவதே போன்றிருந்தது. இத்தகைய மாதினள் உள்ளும் புறமும் ஒருங்கே அமையப் பெற்றிருப்பாளா

யின் அவள் உண்மையிலே மாதர் திலகமாவள் என்பதில் ஐயமிலது. ஆனல்—ஐயகோ!—அவளது உள்ளமோ உத்தமர் கண்டு அஞ்சத் தக்கதாயிருந்தது. மாரேசம் பட்டி ஜெமீந்தாரான சதாநந்தரது இளைய மனைவியான சுவர்ணம்பாள் என்ற இப்பெண் பேயைக் கண்டு அனைவரும் நடுங்கினர்.

தனது மாமன் மனைவி இங்ஙனம் தன்னை நோக்கிக் கூறுவதைத்தாங்காது நடுநடுங்கிக் கொண்டே சுவர்ணம்பாள் முன்னிலையில் நின்ற ஒரு பெண் மான் பயந்து கொண்டே, " அம்மா! ஒரு குடம் ஜலம் தூக்கிக்கொண்டு படியேறி வரும் போது கால் சருக்கிக் குடம் என் கால் மேல்..." என்று கூறிக் கொண்டே வந்தவள் கோபத்தால் கொதிக்கும் தனது மாமன் மனைவியின் முகத்தைப் பார்த்தவுடன் சடுக்கென நிறுத்தி விட்டாள்.

" ஆமடீ-ஆமாம்! சொந்த வீட்டிலிருந்து கொண்டு வந்து போட்டால் தெரியும் சொத்தின் அருமை. அதெப்படியடீ அவ்வளவு அஜாக்கிரதையாய்க்குடத்தை எடுத்து வருவாய்? குடம் உடைந்தால் உனக் கென்ன?...." என்று கொக்கரித்தாள் அப்பெண்பேய்.

" அம்மா! படியில் பாசி அதிகமாயிருந்தது. அதனல் என் கால் சருக்கி விடவே குடம் என் காலில் விழ என் காலில் அதிகமாக் காயம் பட்டு விட்டது. அதனல்..." என்று பெண்பால் அடக்கமாய்க் கூறத்தொடங்கியும் சுவர்ணம்பாள் ஆத்திரம் அடங்கியதாகக் காணோம்.

" அடிகள்ளி! எதேதோ மாயா ஜாலமெல்லாம் பண்ணுகிறய்? அதிலெல்லாம் மயங்குவது நானல்ல-போ! உன் செல்ல ஆம்படையானிடம்" என்று தன் எதிரே தாழ்மையுடன் வணங்கி நிற்கும் அணங்கை நோக்கிச் சுவர்ணம்பாள் சுருக்கெனக் கூறினள்.

" அம்மா! அம்மா!! நீங்களே பார்த்து என்னை இப்படிச் சொன்னல் நான் என்ன செய்வது? அம்மா!...." என்று கண்ணீர் விட்டுக் கொண்டே கூறினள் அம்மடமங்கை.

" அடீகழுதை! நீலிக்குக் கண்ணீர் நிமையிலே என்பார்களே அது உண்மைதானடி; நான் என்னடி சொல்லி விட்டேன். மளமள வென்று மாலை மாலையாய் அழுகிறய்- ' என் கண்ணே! இப்படி

அழலாமா ?' என்று சொல்லி உன் மூஞ்சியைப் பார்த்து நான் சொல்ல வேண்டுமோ? சீநாயே! உன் கள்ளனிடம் போ!"; என்று மற்று மோர் முறை சுவர்ணம்பாள் இடித்து இபம்பினள்.

அதனால் அழுகை பின்னும் அதிகரிக்க அம்மடமயிலாள், "அம்மா! திரும்பத் திரும்ப இப்படி என்னை நோக்கிக் கூறலாமா? தாயே! இது தகுமா? எனது தாயையு மிழந்து, தந்தையை யும்பரி கொடுத்துத் தவிக்கும் என்னை நோக்கித் தாங்களே இப்படி...."என்று கெஞ்சிய வண்ணம் மெல்லிய குரலில் கூற அதைக் கேட்ட சுவர்ணம்பாள், "ஆஹா! என்ன துணிச்சல்! அடி! செக்கு உலக்கை போலிருக்கும் செருக்குப் பிடித்த நாயே! உனக்கு உதையில்லாமல் ஒன்றும் புரியாது....பாவம்-அடாடா! எந்தக் காலில் அடிபட்டது எந்தக் காலிலம்மா காயம்? எங்கே காட்டு பார்ப்போம்!" என்று மிகவும் பச்சாதாபப்படுவதே போலக் கூறினள்.

தனது மாமன் மனைவி தனக்காக நிரம்பவும் இரங்கி, பச்சாதாபப்படுவதாக எண்ணிய அவ்வணங்கும், தனது வலது காலைத் தூக்கிச் சுவர்ணம்பாளுக்குத் தெரியும்படி காயம்பட்ட இடத்தைக் காட்டினள். உடனே சுவர்ணம்பாள் தனக்குப் பக்கத்திலிருந்த விறகுக்கட்டை யொன்றை எடுத்துக் கொண்டு, "கழுதை! காலையா தூக்கிக் காட்டுகிறாய்?" என்று கூறியவண்ணம், காயத்தின் மேலேயே இன்னும் பல அடிகள் வைத்தாள்.

"ஐயையோ! அம்மா! ஈசா! என் உயிர் போகுதே! காப்பாராருமில்லையா?" என்று நெருப்பில் விழுந்த ஈ போலத் துடிக்கும் அப்பாவையிடம் இரக்கங்காட்டாதபேய் உடனே சட்டென நிறுத்திவிட்டு, "இந்த சாகஸமெல்லாம் வேண்டாமடீ. போ! சீக்கிரம் சமையலாகட்டும்!" என்று அதட்டினள்.

அதற்குள் அங்கே வந்த சதாநந்தர், "அடாடா! என்ன கூச்சல்? இந்த வீட்டில் இனி இருக்கவே முடியாது போலிருக்கிறதே" என்று சொல்லிக்கொண்டே வந்து தமது மனைவியை நோக்கி, "என்ன சமாசாரம்?" என்று வினவினர்.

"என் ஒங்க மருமகப் பெண்ணையே கேளுங்களேன்! பொண்ணும்-பொண்ணு-பொன்னு இல்லெ!" என்று அலட்சியமாய்ப் பதிலளித்தாள் அப்பேய்.

"ஆமாம்! பாவம் அமிர்தமாலினி என்ன செய்யும்? பதினைந்து வயதுதானே ஆச்சு. ஒரு தவிசுப்பிள்ளை வைத்து விடலாமென்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன். ஒருவனை வைத்துவிட்டால் இவ்வளவு சண்டைக்கும் காரணமில்லையே!" என்றார் சதாநந்தர்.

"என்ன? என்ன சொன்னீர்கள்? சட் வாயை மூடுங்களேன்! உங்களை யார் கேட்டது? சமாசாரமொன்றும் புரியவில்லையோ? ஒரு காசு அகப்படுவது குதிரைக் கொம்பாயிருக்கும் இந்நாளில் தவசுப் பிள்ளை ஒரு கேடா?" என்று பாராநந்தரையும் அடக்க முயன்ற சுவர்ணம்பாளின் ஸ்வரூபத்தைக்கண்டதும் அவர் அடியோடு நெஞ்சு திடுக்கிட்டார். உடனே தமது குரலை அதட்டிக் காட்டி, "அசட்டுப் பெண்! மாமியிடம் இந்த விதம் நடந்து கொள்வது என்பதுந் தெரிவதில்லை. போ! போ!! பெரியவாள் ஏதாவது சொன்னால் அழத் தொடங்கி விடுகிறாயே!" என்று தமது மனைவிபக்கம் சார்பாகப் பேசினார். இதனால் தன் கட்சியே ஓங்கியதைக் கண்ட சுவர்ணம்பாளின் முகத்தில் "ஜெயித்தோம்!" என்ற கர்வமான புன்னகை யொன்று தோன்றிச் சடுக்கென மறைந்தது.

அமிர்த மாலினியோ, "மாமா...." என்று ஏதோ கூற ஆரம்பித்தவள் தனது மாமியின் முகத்தைப் பார்த்ததுமே சட்டென நிறுத்தி விட்டு வேறொன்றுங் கூறாமல் அவ்விடத்தை விட்டு நொண்டிக் கொண்டே அகன்றாள்.

'அமிர்தமாலினி எப்போது மறைவாள், நாம் இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்து அமிழலாம்" என்று ஆசையுடன் காத்திருந்த சதாநந்தர் அப்பெண்மான் அப்புறம் அகன்றதும் சுவர்ணம்பாள் என்னும் நுண்ணிடையாளை மார்புறத்தழுவி இன்பமடைய அவளண்டை நெருங்கினார். "என் கண்ணே! முத்தே!!...." என்று அவளருகில் நெருங்கியவர் சுவர்ணம்பாளது கர்ணகடோமான முகத்தைக் கண்டதும் சட்டென நின்று விட்டார். "ஆ கண்ணே! கோபமும் உனக்கு ஓர் அழகைக் கொடுக்கிறது. கண்மணி! இப்படி வா! உனக்கென்ன கோபம்?" என்று கூறிய வண்ணம் மேலும் பொறுக்க மாட்டாதவராய்ப் பிணங்கி நின்ற சுவர்ணம்பாளைத் தம்மருகிலிழுத்துச் சேர்த்தணைத்துக் கட்டி அவள் முகத்தில் முத்தங்கள் பல இட்டு அப்போதுதான் தமக்கு ஐந்து வயதென எண்ணி, ஒரு குழந்தையை

# 6-வது அதிகாரம்

## கலிகாலக்கள்ளன்—கலவரக் கடிதம்

இரண்டாவது அதிகாரத்தின் இறுதியில் காந்தாமணிக்கு வந்த கடிதத்தைப் படித்து மனமுடைந்த செல்லப்பா தனது சிநேகிதன் வீட்டு டீபார்டிக்குச் சென்று, அங்கு யாரையும் காணுமல் தவித்து ஏமாந்து துடிதுடித்து நின்றவன், தனக்கு எதிர்பாராதவிதமாய் இவ்விதமான சம்பவம் நிகழ்ந்ததை எண்ணி வருந்திக் கலங்கிக் கண்ணீர் பெருக்கியவண்ணம், அந்த நடைக்கதவை தடதடவென்று பலமாய்த் தட்டவாரம்பித்தான்; பலதரம் 'ஐயா! ஐயா!' என்று கூவியும் பார்த்தான்; அவனுக்கு யாதொரு உதவியும் கிடைக்கவில்லை. அவ்விடத்தில் அவனையன்றி வேறு மனிதரிருப்பதாகவே தெரியவில்லை. அங்கே சிறிதும் சந்தடியின்றி நிச்சப்தமே குடிகொண்டிருந்தது. அவனும் தன்னுல் ஆனமட்டும் கதவைத் தட்டிப் பார்த்தான்; கூவிப் பார்த்தான்; அதனுல் அவன் கைகளிலும் தொண்டையிலும் வலியுண்டாயிற்றே ஒழியச் சிறிது பயனுவது கிடைக்கவில்லை. செல்லப்பாவின் மனத்தில் பலவித சந்தேகங்களும், கலக்கமும் அதிகரிக்க வாரம்பித்தன. அவனுக்கு இன்னதென்று இயம்புவதற்கியலாவிதமான மனக்கொதிப்பும், ஆத்திரமும், தனக்குக் கடிதம் எழுதிய நேசன்மீது கடுஞ்சினமும் பொங்கி வருகின்றன. கூண்டிலடைபட்ட சிங்கம்போல் அவன் நாலா பக்கமும் சுற்றிச் சுற்றி வருகின்றுன். எங்கும் வழிமாத்திரம் கிடைக்கவில்லை. எந்தப் பக்கம் பார்த்தாலும் கதவுகள் தாளிட்டபடியே இருக்கின்றன. எதைத் திறந்தாலும் இடித்தாலும் அசைக்கக் கூடவில்லை. என்ன செய்வான் பாவம்! ''நம்மை டீபார்டி என்று வரவழைத்து இவ்விதமான ஆபத்திற்கு உள்ளாக்கவேண்டிய காரணம் யாது? ஒருகால் இவ்விதம் யாராகிலும் பகைவர்கள் செய்திருக்கலாமோ? அப்படிக்கும் நாம் யாரிடத்திலும் துவேஷித்துக்கொண்டதே இல்லையே! நம்முடைய பெற்றேரைத்தான் பகைத்துக் கொண்டிருக்கிறேம். அவர்களே இவ்வாறு செய்தார்களோ? இவ்வாறு செய்தால் தங்கள் வழிக்கு வந்துவிடுவான் என்ற எண்ணமோ அவர்களுக்கு?— உம்! நானு இவற்றிற்கெல்லாம் திரும்புகின்றவன்? பட்டிக்காட்டுப் பனைதையைப்போல்

திரிவதற்கு யார் முன் வருவார்கள்? நான் அவர்களைப்போல் குப்பைக்காட்டு மனிதன் மாதிரி நடப்பவனாயின் என்னருமைப்பத்மவல்லியை த்வேஷித்துக்கொள்வேனா? எவ்வளவோ அருமையாயும் அழகாயுமுள்ள என் தங்கையைக் துவேஷித்துக்கொண்டு வந்த நான் இவர்கள் இவ்வாறெல்லாம் விரட்டுவதற்குப் பயந்து கட்டுப்பட்டு விடுவேனா? ஒருநாளும் திரும்பேன்.....நான் செய்த புண்ணிய வசத்தால் எனக்குக் கிடைத்த கண்மணியாகிய காந்தாமணியே என்னுயிர் நிலை என்று எண்ணிய எனக்கு அவளிடமுமல்லவா மனவருத்தம் ஏற்பட்டுவிட்டது. உம். ஒருகால் அந்தக் கடிதம் எழுதி என்னை ஏமாற்றும்பொருட்டு அவ்வாறு செய்து என்னைத் திருப்புவதற்காக என் பெற்றோர்களே இப்படிசெய்திருப்பார்களோ? அந்தக் காந்தாமணியை நான்விட்டு விட்டு வரும்பொருட்டாக அதை யொருகால் அவர்களே செய்து, இவ்விதமும் டீபார்டி என்று என்னை என் சிநேகிதன் வரவழைத்த மாதிரி இங்கு வரவழைத்து அடைபடும்படி செய்திருப்பார்களோ! இவ்விரு சம்பவங்களையும் ஒரே காலத்தில் அவர்கள் தான் செய்திருக்கவேண்டும். சேச்சே! காந்தாமணி ஒருபோதும் அவ்வாறு ஒருவனை மோதிரம் மாற்றிக்கொண்டு, ஏமாற்றியிருக்க மாட்டாள். இவைகளெல்லாம் கட்டுக்கதை. என்னைக் கலைக்கும் பொருட்டு எனக்குச் சத்துருக்களாகிய என் ஈன்றோர் செய்திருக்கும் சூழ்ச்சிதான் இது. சந்தேகமில்லாமல் கூறுவேன். இதற்கெல்லாம் நான் திரும்புகின்றவனா? அடடா! முதலில் அந்தக் கடிதத்தைக் கண்டதும் எனக்கு உண்டான ஆத்திரத்திற்கு ஓரளவே இல்லை. அதோடு அங்கு காந்தாமணியை வேறொருவன் முத்தமிட்ட காட்சியை என் கண்ணால் பார்த்தவுடனே எனக்கு அக்கடிதத்தில் கண்ட செய்திக்கும் அப்பொழுதே நேரில் கண்ட விஷயத்திற்கும் சம்பந்தமிருப்பதாயறிந்த என் மனம் கலங்கிவிட்டது. இந்தச் சதியாலோசனை செய்து என்னை இவ்விதம் செய்ததனாலன்றோ, எனக்கு அதுவும் பொய்யாக வந்ததுதான் என்று தோன்றுகின்றது. காந்தா மணியை வேறொருவன் கரத்தில் முத்தமிட்டதனால் அது பெரிய தவறாய் விடுமா? அது ஒருகாலுமாகாது. இவைகளெல்லாம் நம் மேனாட்டு நாகரிகத்திற்குச் சிறிதும் குற்றமேயல்ல. அந்தப் பொய்க் கடிதத்தை உண்மை என்று நம்பி மனம் தவித்த வண்ணமிருக்கும் தருவாயில் அந்தக் காட்சியையும் கண்டதனால் மூடமதியினால்நான் என் கண்மணியைச் சற்று வெறுத்துவிட்டேன். ஐயோ! சீச்சீ!

என்ன தவறு எண்ணிவிட்டேன்! இவ்விதம் செய்ததெல்லாம் என் பெற்றோர்களேயன்றி, வேறு யாருமில்லை. ஐயோ! நான் மூடமதியால் காந்தாவின்மீது கடுஞ்சினங்கொண்டு வந்ததை யாரேனும் கண்டிருப்பார்களோ? நான் அந்தக் கடிதத்தையாரிடமும் காட்டக்கூடாது. அவ்விஷயத்தை காந்தாவிடத்திலும் தெரிவிக்காமல் மறைத்துவிட வேண்டும். ஏனெனில் இவ்வித சதியாலோசனையை என் பெற்றோர்கள் செய்தார்கள் என்பதை அவள் அறிவாளானால் என்ன எண்ணுவாள்? என்னை எவ்விதம் மதிப்பாள்? ஒருகால் என்னை அலக்ஷியம் செய்தாலும் செய்வாள்; ஆனதால் நாமிதை வெளியில் கூறலாகாது. நாம் எவ்விதமாயினும் இங்கிருந்து தப்பித்துக்கொண்டு உடனே காந்தாவிடம் சென்று அவள் ஒரு சிறிதும் சந்தேகம் கொள்ளாதபடி செய்யவேண்டும்'' என்று பலவாறும் எண்ணமிட்ட வண்ணம் அங்குமிங்கும் ஓடித் திரிந்து தனக்கு எங்காகிலும் வழி கிடைக்குமோ என்று அந்த வீட்டில் அவன் போகக்கூடிய இடமுற்றும் தேடிப் பார்த்தான். எங்கும் ஒரு கதவாகிலும் திறக்கக்கூடவில்லை. ஜன்னல்களும் சாத்தி இருபுறமும் தாள் போடப்பட்டிருந்தன. பொழுது அதிகரிக்க, அதிகரிக்க இவன் மனதில் பெருத்த திகிலும் பீதியும் தோன்றிக் கலக்கவாரம்பித்தன. அங்கு கூடத்தின் மத்தியில் முணுக்கு முணுக்கு என்று எரிந்துகொண்டிருந்த சிறிய விளக்கைக் கையில் எடுத்துக்கொண்டு தான் ஏறிச்சென்ற மாடிக்கே மறுபடியும் சென்றான். அங்கும் இவனுக்கு ஒரு வழியும் காணப்படவில்லை. அந்த விளக்கு மாடியில் அடித்த காற்றினால் அவிந்து விட்டது. அங்கு முற்றும் ஒரே இருள்மயமாய் மாறிவிட்டது. அந்தப் பயங்கரமான இருளைக் கண்ட அவனுக்கு முன்னிலுமதிக பயம் ஏற்பட்டு வதைக்கவாரம்பித்தது; அங்கு இறங்கும் வழியும் இருளில் இவனுக்குத் தெரியவில்லை. அந்த மாடிப் படியிருக்கும் இடத்தை மெல்லத் தாவித் தடவிக்கொண்டே இறங்கவாரம்பித்தான். அப்போது அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அதாவது, "இந்த மாடிப் படிக்கு முன்பக்கத்து ஹாலில், ஒரு பெரிய கண்ணாடி தெரிகின்றதே. இது நடைப்பக்கத்து இடமாகத் தானிருக்கவேண்டும். இந்தக் கண்ணாடியை உடைத்துக் கொஞ்சம் கண்ணாடி கூட விடாமல் எடுத்தெறிந்து விட்டு அந்தத் துவாரத்தின் வழியே மெல்லக் கீழே குதித்து வீதிக்கதவைத் தட்டினால் வீதியில் போகிறவர்கள் வருகிறவர்கள் கதவைத் திறக்க மாட்டார்களா?''

என்று எண்ணியவனாய் அந்தக் கண்ணாடி பளிச்சென்றும் மழமழவென்றும் தெரிந்த இடத்தைத் தேடிக்கொண்டு மெல்லச் சென்றான். அது வெண்மையான கண்ணாடிபோல் தோன்றியதேயன்றி, அவன் தன் சட்டைப்பையில் சுருட்டுக்காக வைத்திருந்த தீக்குச்சியை எடுத்துக் கொளுத்திப் பார்த்ததில் அது முற்றும் சலவைக்கல்லினால் கட்டப்பட்ட தரையாக இருக்கக்கண்டு ஏமாற்றமடைந்தான்; பின் அந்தத் தீக்குச்சிகளைக் கொளுத்தி அவிந்த விளக்கை ஏற்றினான். அதில் எண்ணெயில்லாமையால், அது எரியவில்லை. அவன் கையில் நாலைந்து தீக்குச்சிகளே இருந்தன; அவைகள் கொளுத்தப்பட்டுப் போயின. இனி என் செய்வது என்று அவன் திகில் கொண்டு சட்டைப்பையைத் தடவிப் பார்க்கையில் ஒரு தீக்குச்சி கிடைத்தது. அதைக் கொளுத்தி அதனுதவியால் கூடியமட்டும் இடங்களைப் பார்த்தான். எங்கும் வழி கிடைக்கவில்லை. பிறகு, மெல்லப் படியின் வழியைத் தேடிக்கொண்டு இறங்கிவந்து கூடத்தையே அடைந்தான். அங்கு இருட்டுக்கருக்கலில் கண்ணே தெரியவில்லை. கையை நாலா பக்கமும் துளாவியபடியே பார்ப்பதற்குமில்லை. இருளில் கையை எங்கேயாவது வைத்து, தேள் முதலிய விஷ ஜெந்துக்கள் தீண்டிவிட்டால் இந்த நிராதரவான வேளையில் என்ன செய்வது என்றெண்ணிப் பயந்தான். "ஐயோ! இதென்ன கெட்ட காலம்! யார் முகத்தில் விழித்தேன்! இவ்விதம் அநுபவிக்க நேரிட்டதே. இவ்விதம் என்னைச் சதிசெய்து பார்க்கவேண்டுமென்று அவர்கள் மனம் துணிந்ததே! இத்தகைய மாதா பிதாக்கள் இருந்தால் மக்களுக்குக் குறைவு ஏது? சத்துருக்களென்றால் அவர்களல்லவோ சத்துருக்கள். சேச்சே! இத்தகைய மகா கொடிய மனிதரின் வயிற்றில், என்னை ஏன் பிறக்கவைக்க வேண்டும்? அந்தோ அந்தக் கொடியவர்கள் வயிற்றில் பிறந்து, இவ்விதம் அவமானமடைய நான் என்ன பாபம் செய்தேனோ தெரியவில்லையே! என்னைக் கேட்பவர்களுக்கு இன்னாருடைய புத்திரன் என்று சொல்லிக் கொள்வதற்குக்கூட வெட்கமாக யிருக்கின்றதே! இன்னுமிப்பொழுது செய்திருக்கும் இந்தச் சதியாலோசனையை, என் சினேகிதர்களும், மாமனாரும், காந்தாவும், இன்னும்மற்றுமுள்ளோரும் தெரிந்துகொள்வாராயின் என்கதி என்னவாகும்? அதைவிட அவமானம் வேறுமுண்டோ? என்ன செய்வேன்?" என்று சிந்தித்தவண்ணம் அங்கு மெல்லத் தடவிக்கொண்டே போகையில் கூடத்தில் ஒரு கதவு தென்

பட்டது. அது கூடத்துப் பக்கமாயிருப்பதால், அது ஒருகால் அடுத்த வீட்டிற்குச் சம்மந்தமாக இருக்குமோ, இல்லையேல் தனியான அறையாக இருக்குமோ, எதற்குமிதைத் தடதடவென்று இடித்துப் பார்ப்போம்; இதன் மூலமாக ஏதாவது பலன் கிடைக்குமோ என்று கதவைத் தடதடவென்று ஓங்கித் தட்டவாரம்பித்தான்; கைவிடாமல் சற்றுநேரம் இடித்துப் பார்த்தான். ஒருவிதமான தகவலும் கிடைக்கவில்லை. அவனுக்கே சலிப்பேற்பட்டு ஓய்ந்து நின்று விட்டான்.

மூன்றாவது அதிகாரத்தின் இறுதியைக் கவனிப்போம்—வரப்ரசாதி தாசி நீலாமணி வீட்டில் அவளது சயன அறையில் ரகஸியமாகச் சென்று, அவளுடைய நகைகளை அவள் வருவதற்குள்ளாகத் திருடிக்கொண்டு ஒன்றையும் அறியாதவன்போல் வெளியில் வந்துவிடவேண்டும் என்ற எண்ணத்தோடு, அவளது பெட்டியை மாதுசாமியின் உதவியால் திறந்து நகைகளை எடுத்துக்கொண்டு, பெட்டியைப் பூட்டுவதற்குள், நீலாமணி வந்து பார்த்து, 'திருடன் திருடன்' என்று கூச்சவிட்டாளல்லவா? அக்கூச்சல் வரப்ரசாதியின் வயிற்றில் பெருத்த இடி இடித்ததுபோலிருந்தது; அன்றியும் அவன் உச்சி மயிரைப் பிடித்து ஆட்டி உலுக்கி, நடுங்கச் செய்துவிட்டது. அவன் இன்ன செய்வதென்று அறியாமல் கலங்கி ஒரு நிமிஷநேரத்திற்குள் சித்திரவதைக்குள்ளாய்விட்டான். நீலாமணி 'திருடன், திருடன்' என்று கூவிக் கூக்குரலிட்டாளேயன்றி, அவள் மனத்திடத்துடன் அந்த அறையின் உள்ளே செல்வதற்குப் பயந்துவிட்டாள். நீலாமணியினுடைய தம்பூரா, ஆர்மோனியம் முதலியவற்றை எடுத்துவர வேலைக்காரன் வீதியிலிருந்த வண்டிக்கருகில் சென்றிருந்தான். உள்ளேயிருந்த வரப்ரசாதி நகைகளை எல்லாம் அங்கேயே கீழேபோட்டுவிட்டுத் தன் மனத்தைத் தைரியம்செய்துகொண்டு,தான் எவ்விதமேனும் நீலாமணி கண்ணில் படாமல் ஓடிவிடவேண்டும் என்று எண்ணியவனாய் அந்த அறையில் இருந்த விளக்கைத் திடீரென்று அவித்துவிட்டான். நீலாமணிக்கும் வரப்ரசாதிக்கும் நெடுநாளாய்ப் பழக்கமுண்டு. அவ்விடத்திற்கு அடிக்கடி வருத்துப்போக்கு ஏற்பட்டிருந்தபடியால், அந்த வீட்டின் அமைப்பும் வழிகளும் சாதாரணமாய் அவன் நன்றாய் அறிவான். நீலாமணியின் சயன அறைக்கு இரண்டு கதவுகள் உண்டு. ஒன்றை அதிகமாகத் திறப்பதே கிடையாது. ஒன்று சாதாரணமாக உபயோகப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த அறை அதிக அகலமும்

18233

நீளமும் உடைய சிங்கார அறையாக அமைந்திருந்தது. வழக்க மாகத்திறக்கப்படும் கதவு முன் கட்டிலிருந்தது. பூட்டி வைத்திருக்கும் கதவைத் திறந்து சென்றால் அது நடுக்கட்டிற்கு வழி ஏற்படுவ துடன் புறக்கடைமட்டும் போகும் வழியில் கலந்து கொள்ளும் விதத் தில் அமைக்கப்பட்டிருந்தது. அப்போது வரப்ரசாதிக்கு அந்தக் கதவின்மீது கவனம் சென்றது. பூட்டியிருக்கும் கதவின் சாவியை நீலாமணி அந்த அறையிலேயே ஒரு அலமாரியில் வைப்பது வழக் கம். அதை வரப்ரசாதி அறிவான். ஆகையால் அவன் சரேலென்று ஓர் இமைப்பொழுதில் அந்தச் சாவியைச் சந்தடி செய்யாமல் எடுத்து மெல்ல கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்தான். ஓசை செய் யாமல் கதவைச் சாத்திக்கொண்டு வெளியேவந்ததும், அங்கு பக் கத்து வீட்டிற்கும் இந்த வீட்டிற்குமாக நடுச்சுவரில் வைத்திருந்த கதவைத் திறந்துகொண்டு தான் வெளியே போய்விடலாம் என்று எண்ணிக் கதவின் இந்தப்புறம் இட்டிருந்த தாழ்ப்பாளை நீக்கினன். அந்த வீடும் பக்கத்து வீடும் நீலாமணியின் சொந்த வீடுகள். அந்த அடுத்த வீட்டில் தான் குடியொன்றும் வைக்காமல் சில சமயங்களில் தன்னை நாடிவரும் ஆண்பிள்ளைகளுக்காகக்கச்சேரிவைப்பதற்கும்; அவர் கள்வசதியாய்த்தங்குவதற்கும் அதைக் கலியாணம் முதலியவற்றிற்கு வாடகைக்கு விடுவதுமாக உபயோகித்து வந்தாள். பக்கத்து வீட்டை முற்றும்உட்புறமேதாளிட்டுவைப்பது அவள்வழக்கமாகையால், வீதிக் கதவைத் திறந்துகொண்டு மெல்ல நழுவி விடலாமென்று எண்ணி, வரப்ரசாதி அந்தக் கதவைத் திறந்தான். அதே சமயம் செல்லப்பா தானிருந்த வீட்டின் கூடத்துக் கதவைப் பலமாகத் தட்டிப் பயனற்று ஓய்ந்துபோய் நின்றுவிட்டான். "ஐயோ! நம்மை இவ்விதம் செய்வ தெல்லாம் நம்முடைய பெற்றோரான சத்துருக்களேயன்றி வேறில்லை. ஆஹா! காந்தாமணி! உன்னைவிட்டு நான் பிரிந்து அவர்களிஷ்டப்படி நடக்கவேண்டும் என்ற உட்கருத்தை முன்னிட்டு இவ்விதமான சதி யாலோசனைகளை யெல்லாம் செய்துவிட்டதனுல் நான் மாறிவிடுவேன் என்ற மூட நம்பிக்கைக்கு நானு உட்படுவேன்? உம்! நான் எவ்வித மாகிலும் தப்பித்துக்கொண்டு வெளி ஏறிவிட்டால், என்னை இவ் விதம் செய்தது அவர்கள் தான் என்பதை நன்றாக விசாரித்து அவர் கள் மீதிலேயே வழக்குத் தொடர்கின்றேன். என் கண்மணி காந் தாவைக் கணமும் பிரியாமலிருக்கின்றேன். சீ! இந்தப் பாழும் கடி தத்தைக் கண்டல்லவா, நாம் இத்தகைய ஆபத்திற்குள்ளானேம்.

இதை இப்பொழுதே கிழித்தெறிகிறேன்'' என்று எண்ணியவாறு தன் ஜேபியிலிருந்த கடிதமிரண்டையும், எடுத்துச் சுக்கல் சுக்கலாய் கிழித்தெறிந்துவிட்டான். அவன் பலவிதமான எண்ணத்தில் மனதைச் சிதறவிட்டுக் கொண்டே கதவை இடித்துச் சோர்ந்துபோய் அப்படியே ஐந்து நிமிஷம் நின்று யோசித்திருந்த தருணம், வரப்ரசாதி கதவைத் திடீரென்று ஓசை செய்யாமல் திறந்தான். கதவின் அப்புறத்திலிருந்த செல்லப்பா ஆத்திரமும் மகிழ்ச்சியுமடைந்து தன்னைத்தானே தேற்றிக்கொண்டு, "நாம் ஆத்திரப்பட்டு எதுவும் பேசலாகாது கதவைத் திறந்த பக்கமோ பக்கத்து வீடு மாதிரியிருக்கின்றது. நாம் இடித்த சத்தம் கேட்டே அவர்கள் கதவைத்திறந்திருக்கவேண்டும். அப்படியிருக்க அன்னிய வீட்டுக்காரனை நாம் திடீரென்று அவமதிப்பாய்க் கூறுவது தகாது. நிதானித்து மனிதன் யார் என்பதை அறிந்துகொண்டு செய்வோம்'' என்று மனதில் நிச்சயித்துக்கொண்டான்; கதவுதிறக்கப்பட்டதும் அவன்சரேலென்று வாசற்படியைத் தாண்டி இப்புறம் வந்தான். அதே சமயம் வரப்ரசாதியும் அந்தப்புறம் அவஸரமாய்ப் போக வாசற்படியைத் தாண்டப்போகையில், இப்புறம் வந்த செல்லப்பாவின் தேகம் இவன்மீது பட்டது. அது வரப்ரஸாதியின் மண்டையில் ஓர் இடி இடித்த மாதிரியாயிருந்தது. "அந்தோ! தப்பித்துச் செல்ல வழி ஏற்படுத்திக்கொண்டு வருகையில், இங்கு யாரோ ஒரு மனிதன் இருப்பதாகத் தெரிகின்றதே! அவள் என்னைப் பிடிக்க ஆளைத் தூரத்திவிட்டாளோ! ஐயோ! இந்த மனிதனை யாரென்று அறிவது'' என்று யோசிக்கையில், செல்லப்பா வரப்ரசாதி கையைப்பிடித்துக்கொண்டு, "ஐயா தாங்கள் யார்?'' என்றான். வரப்ரசாதி பயந்திருந்ததற்கு அனுகூலமாய்ச் செல்லப்பா தன் கையைப் பிடித்துக்கொண்டதும் அவன் தேகம் ஆட ஆரம்பித்துவிட்டதென்றாலும் அதை அவன் வெளிப்படுத்திக் கொள்ளாமல், தைரியமாகவே மெல்ல பேசத்தொடங்கி, "ஐயா! என் பேர், ஊர் முதலியவற்றைச் சொல்கிறேன் வாருங்கள். அந்த அறையில் உட்காருவோம்'' என்று கூறிச் செல்லப்பா கையைப் பிடித்து நீலாமணி அறைக்கு அழைத்துச்சென்று செல்லப்பா உள்ளே சென்றதும் அங்கு கதவைச் சாத்தி வெளியில் தாழ்ப்பாள் போட்டுவிட்டு வரப்ரசாதி செல்லப்பா இருந்த வீட்டின் வழியாகச் சென்று புறக்கடைக் கதவைத் திறந்துகொண்டு ஓடிவிட்டான்.

அங்கு ஒரே இருள் மயமாயிருந்தபடியால் செல்லப்பாவிற்குத் தன்னை அழைத்துவந்தமனிதன் யாரென்பதை அறியக்கூடாமல் போய் விட்டது. மேலும் மெல்லப்பேசியதால் குரலிலிருந்தும்இன்னாரென்று கண்டுகொள்ள முடியாமற்போய்விட்டது. தான் கேட்டதற்குப் பதில் அந்த அறையில் சென்றபின்னர் சொல்வதாகச் சொல்லித் தன்னை அழைத்துவரும் வரையில் செல்லப்பா ஒருவிதமாயிருந்தான். பின் தான் உள்ளேவந்ததும் அவன் கதவை ஓசை செய்யாமல் இழுத்துச் சாத்திக் கொண்டதைக் கவனிக்கையில் அவனுக்கு இன்னுமதிக மாய் பயம் சூழ்ந்துகொண்டது. அவனுக்கு விவரம் இன்னதென்றே அறியக்கூடாமல் ஆத்திரம் பொங்கித் தீயாய் மாறிவிட்டது. தன்னை உள்ளே விட்டுக் கதவைச் சாத்தியதை யறிந்ததும் அவன் கோபா வேசங்கொண்டான். அச்சமயம் "ஐயோ! எல்லோரும் வாருங்கள் திருடன் திருடன், அடே கந்தா சீக்கிரம் வா" என்று நீலாமணி கூவியது செல்லப்பா காதில் விழுந்தது. உடனே அவனுக்கு இங்கு சமீபத்தில் ஓர் வழியிருக்கவேண்டும்; எங்கிருந்தோ ஒரு கூக்குரல் வருகின்றதே என்று அந்த அறையின் முன் கதவின் பக்கமாக நடக்க வாரம்பித்தான். அதே சமயம் நீலாமணி "ஐயா இதோ இந்த அறை தான் திறந்திருக்கின்றது. இதோ பூட்டை மறுசாவியால் திறந்திருக் கின்றது" என்று கூவினாள். இதைக்கேட்ட செல்லப்பா "இந்தவீட்டில் யாரோ திருடன் வந்திருப்பதாய்த் தெரிகின்றது. நாமும் அந்த வழி யின் மூலமாய்த் தப்பித்துக்கொண்டு செல்வதோடு திருடனையும் பிடித் துத் தருவோம் என்று எண்ணியவனாய் அந்த அறையின் கதவிருக் கிற பக்கத்திற்கு வந்தான். கதவுதிறந்திருந்ததால் கூடத்து விளக் கின் ப்ரகாசம் அங்குச் சிறிது தெரிந்தது. அவன் சரேலென்று வெளியே வருவதற்கு விரத்துடன் முன்வந்தான். அவன் வாசற் படியண்டை வந்ததும் அதே சமயம் ஐந்து, ஆறு ஆண்பிள்ளைகள் இந்த அறையா இந்த அறையா என்று வினவிக்கொண்டே அறையில் பிரவேசிக்க எதிரே செல்லப்பா வருவதைக் கண்டு, "ஓ! இதோ திரு டன்; இதோ திருடன் பிடிபட்டுவிட்டான்." என்று கூவிக்கொண்டே செல்லப்பாவின் இருகரங்களையும் இருவர் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு" அடேயப்பா! திருட்டுத் தடிப்பயல் உடை தரித்திருக்கும் ஒழுங்கைப்பார்த்தீர்களா? இவ்விதம் நாம் உடை தரித்துத் திருடி னால் நம்மையாரும் சந்தேகிக்கமாட்டார்களென்று இப்போது திருடர் கள் இவ்விதம் வேஷம் போடுகிறார்கள் சார் "என்று எல்லோரும் ஒரு

பித்துக் கூக்குரலிட்டார்கள். செல்லப்பா இப்போது கோபங்கொண்டு கைகளைத் திமிறிக்கொள்ள முயன்றபடி, "என்ன ஐயா! விவேகமின்றித் தாருமாருகப் பிதற்றுகின்றீர்கள். இது அழகல்ல. என்னை என்ன காரணத்தினால் திருடன் என்று சொல்கின்றீர்கள்? வேண்டாம், என் கையை விட்டுவிடுங்கள்" என்று கூறினான். இதற்குள் நீலாமணி அந்த அறையில் சென்று விளக்கை ஏற்றிப் பார்க்க அங்கு தன்னுடைய நகைகளும் பெட்டியும் தாருமாருக வைத்திருப்பதைக்கண்டு "ஐயோ! பாவி, படுபாவி 'என்னை ஏன் திருடன் என்று கூறுகின்றீர்கள்' என்று தைரியமாய்க் கேட்கின்றானே. இதோ இப்படி வந்து பாருங்கள்" என்று கூக்குரலிட்டாள். அவள் உள் செல்லும்போதே அவளோடு கூடச் சென்ற சிலர் அதைப் பார்த்து அவர்களும் அவ்வாறே கூச்சலிட்டார்கள். இதற்குள் இந்த வீட்டு வேலைக்காரன் போலீஸ் சேவகனுக்குச் செய்தி தெரிவித்து அழைத்துக்கொண்டு வந்துவிட்டான். இரண்டு கான்ஸ்டேபில்கள் வந்து, "என்ன சங்கதி! என்ன சங்கதி! எங்கே திருடன்?" என்று கூவிக்கொண்டே வந்து, செல்லப்பாவைப் பிடித்துக் கொண்டார்கள். செல்லப்பாவின் ஆடம்பரமான அலங்காரத்தையும் உடைகளையும் பற்றி அங்குக் கூடியிருந்த பலபேரும் பலமாதிரியாக ஏளனம் செய்து பேச ஆரம்பித்தார்கள். "திருட்டுப் பயல்களுக்கு ஷோக்கைப் பார்த்தீர்களா சார்! மோசக்காரப் பாவிகள் யாரை எவ்விதம் ஏமாற்றலாம் என்ற யோசனையோடு இவ்விதம் ஆடம்பரமாய் உடை தரித்து வந்து விடுகிறார்கள் சார்! காலம் வரவரக் கெட்டுவிட்டது; பகல் வேளையிலேயே இம்மாதிரியான டாம்பீகத்துடன் வீடுகளுக்குச் சென்று அகப்பட்டதை எடுத்துக்கொண்டு போகிறார்கள் சார்! உலகத்தில் அநீதி அதிக்ரமிக்கின்றது. அநியாயப் பாவிகளும், திருட்டுப் பாவிகளும், கொலை பாதகர்களும், நிறைந்து விட்டார்கள் சார்! இப்படிப்பட்ட காலத்தில் இன்னும் போகப் போக என்னென்ன அக்ரமங்கள் நடக்குமோ தெரியவில்லை. மனிதருக்கு மனிதர் பார்த்துக்கொண்டே யிருக்கையில் இவன் எப்படி பேசுகிறான் பாருங்கள். உலகமே அநியாய மயமாய் மாறிவிட்டது" என்றார்கள். இதற்குள் சேவகன் உள்ளே சிந்திக் கிடந்த நகைகளை எடுத்துக்கொண்டு வந்தான். நீலாமணியோ வாயில் வந்தபடி செல்

லப்பாவைத் திட்ட ஆரம்பித்துவிட்டாள். இதையெல்லாம் கண்ட செல்லப்பாவிற்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. ஆத்திரம் மனதில் பறக்கிறது. பல்லைக் கடிக்கின்றான். கையைத் திமிறுகின்றான். அவன் வயிற்றிலிருந்து பொங்கி வரும் கோபத்தினால் அவன் தன்னைப் பிடித்திருப்பவர்களை அதம் செய்துவிட எண்ணுகிறான். பின்னும் தன் கைகள் தன் வசமில்லாமையைக் கண்டு பல்லைக் கடிக்கின்றான். அவனுக்கு அவனால் அடக்க இயலாத கோபம் கிளம்பி விட்டது. அவன் அதைச்சகியாமல் தன்னை அநாவசியமாய் இவ்விதம் அவமானப்படுத்தி விட்டார்களே என்ற அகங்காரத்தினால் தூண்டப் பட்டவனாய்க் கண்ணில் நெருப்புப்பொறி கிளம்பப் பேசத் தொடங்கித் தன்னைப் பிடித்திருக்கும் சேவகனைப் பார்த்து, பல்லைக் கடித்தவண்ணம் "என்ன நியாயமையா நீங்கள் என்னை இவ்விதம் பிடித்து அவமானப்படுத்துவது? தாங்கள் உலகத்திற்கெல்லாம் நன்மையைச் செய்யக்கூடிய வீரர்களாயிருக்க எனக்கு இவ்விதம் அவமானமும் தீமையும் விளைவிப்பது அழகாகுமா? இந்த வீட்டில் திருட்டுப் போய்விட்டால் அதற்கு யாரை வேண்டுமானாலும் பிடித்துவிடுவது எந்தச் சட்டத்து நியாயமய்யா? வீண்பழி சுமத்துவதுதான் உங்களுக்குத் தருமமா? விடுமையா கையை" என்று திமிறினான்.

இதைக் கேட்ட அங்கிருந்த எல்லோரும் நகைத்துக்கொண்டே "ஓஹோ! இவ்விதமெல்லாம் துணிவாய்க்கூறினால் தன்மீதுகுற்றமில்லை என்று விட்டுவிடுவார்கள் என்ற நம்பிக்கை போலும் இவனுக்கு. இன்னும் இறுக்கிக் கைகளை கட்டுங்கள் சார்! ஆடம்பரமாக உடையணிந்துகொண்டு வீடு வீடாய்த் திருடும் கழுதை! உனக்கு வாய் ஒரு கேடா" என்று கூறினார்கள். இவைகளை யெல்லாம் கேட்ட செல்லப்பா தன்னால் அடக்க இயலாதவிதமான மனக்கொதிப்புடன் நெருப்பின் மீது நிற்பவன்போல் தத்தளிக்கின்றான். அவன் தேகம் கட்டுக் கடங்காமல் பறக்கிறது. அவன் தன்னை அறையில்விட்டுப் பூட்டியவன் தான் இங்குத் திருடிவிட்டு ஓடும் கள்ளன் என்பதை நன்றாயறிந்து கொண்டான். அவனை அப்படியே ஏதோ ஆகாயத்தில் தூக்குவது போல் இருக்கின்றது. தனக்கு ஆபத்து வேளையில் கதவைத் திறந்து உதவினான் என்று எண்ணி முடிப்பதற்குள் தன் தலைக்குப் பெருத்த கல்லைப் புரட்டிவிட்டுத் தன்னை இமைப்பொழுதில் ஏமாற்றி

விட்டுச்சென்ற அந்தப் பாவியை நசுக்கிச் சாம்பிழிந்தாலும் என் வயிற்றெரிச்சல் தீராதே. ஐயோ! அநியாயப்பாவி வாயிலிருந்து வார்த்தை வருவதற்குமுன் அரைநொடியில் நம்மைக் கிணற்றில் தள்ளுவது போலத் தள்ளிக் கதவைத் தாளிட்டுக்கொண்டு போய்விட்டானே. என்ன செய்வேன்?'' என்று தனக்குள்ளாகவே துடிக்கின்றான்; மீண்டும்! அவனை மீறிய கோபத்தோடு பேசத்தொடங்கி, "ஐயா! வீணை என்னை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்? விட்டுவிடுங்கள். நான் இந்த வீட்டுத் திருட்டில் சிறிதும் சம்மந்தப்பட்டவனல்லேன். நான் நடந்த வரலாற்றைத் தெரிவிக்கின்றேன். கேட்ட பிறகாகிலும் உங்களுடைய அநியாயம் உங்களுக்கே தெரியும். எனது நண்பன் என்னை ஒரு விஷயமாய் ஒரு வீட்டிற்கு வரும்படி கடிதமெழுதி யிருந்தான். நான் அவன்கொடுத்த விலாசப்படி குறித்த இடத்திற்கு வந்ததும் அங்கு யாரையும் காணுமலிருப்பதைக் கண்டு வெளியே செல்லப் புறப்பட்ட போது வீதிக்கதவு தாளிடப்பட்டிருப்பதைக்கண்டு அப்போதே என்னை மோசக்கருத்தோடு யாரோ இவ்விதம் செய்திருக்கிறார்கள் என்பதையுணர்ந்து கொண்டு நான் கதவைப் பலதரம் இடித்தும் யாதொரு பிரயோஜனமும் இல்லாமையால் சுற்றிலும் பார்த்தேன். வழி ஏற்படவில்லை. பிறகு அங்கு கூடத்துப்பக்கமிருந்த கதவைப்பலமாகத் தட்டினேன். உடனே சற்றுநேரத்திற்கெல்லாம் கதவை யாரோ திறந்தார்கள். நான் வெளியில் வந்ததும் கதவைத்திறந்த மனிதரின் கையைப் பிடித்துக்கொண்டு "உங்கள் பேரென்ன?நீங்கள் யார்?'' என்று உசாவினேன்; அதற்கவர் "அதோ அவ்வறையிற்போய் உட்கார்ந்துகொண்டு பேசுவோம்'' என்று கூறியவாறு என்னைக்கையைப்பிடித்து அழைத்து வந்து இந்த அறையில்விட்டுவிட்டு உடனே கதவைச் சாத்தி, அவன் அந்தப் பக்கம் தாளிட்டதையறிந்து நான் கதவை இடிப்பதற்குள் இங்கு இந்தம்மாளிட்ட கூக்குரல்கேட்டு இங்கு ஒரு வழியிருப்பதையறிந்து நான் வெளியே வந்தேன். இத்தருணம் என்னை இவ்விதம் கையைப் பிடித்துக்கொண்டு இம்சிப்பது தருமமா? வேண்டாம் விடுங்கள்'' என்று அவன் சொல்லிமுடிக்குமுன், அங்கு கூடியிருந்த எல்லோரும் ஒன்றாகக் கல்லெனெ நகைத்து "அடேயப்பா! இந்தக் கற்பனைக் கதையை ஒரு நிமிஷத்தில் உற்பத்திசெய்து எத்தனை அழகாய் முடித்தான் சார்! பலே! பலே! திருட்டுத்தனத்திலும் தப்பித்துக்கொள்ள

தந்திரமும் செய்யக் கற்றுக்கொண் டிருக்கிறான்! கெட்டிக்கார ஆசாமி தான். இவ்விதக்கோபமும் ஆத்திரமும் துடி துடிப்புமிருக்கிறவன் ஏனையா திருடவேண்டும்''? என்று புரளிசெய்ய ஆரம்பித்தார்கள்.

இவையெல்லாம் செல்லப்பாவின் காதில் நாராசத்தைக் காய்ச் சிக் கொட்டுவது போல் விழுந்தன. அவன் தன்னை வேணுமென்றே இவ்வாறு அவமரியாதையாகச் செய்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டான். கொஞ்சமும் ஒளியாமல் உண்மைகளைக்கூறியும் அவர் கள் இவையெல்லாம் கட்டுக்கதை என்று புரளிசெய்கிறார்களே யன்றி ஒருவனாவது இவன்பக்கம் பேசவில்லை. அதனால் செல்லப்பாவின் மனமும் தேகமும் துடித்தன. அவன் தாங்கமாட்டாத மனக் கொதிப்புடன் மீண்டும் பேசத்தொடங்கி, ''இதென்ன அநியாய காலமய்யா! திருடியவனை விட்டுவிட்டு வேறு மனிதனைப் பிடித்து வைத்திருக்கிறீர்களே. இதுவும் உங்கள் சட்டமுறையா! அந்தச் சண்டாளன் எனக்கு வழிகாட்டுவதுபோல வந்து என்னை இக்கதி க்கு உள்ளாக்கிவிட்டுத் தான் தப்பித்துக்கொண்டானே. அந்த அநி யாயத்திற்குக் கேள்வி முறையில்லையா? நான் கத்துவதும் கதறுவதும் உங்களுக்கு நகைப்பாகவா விருக்கின்றன? வீணாக ஒரு மனிதனின் மனத்தைப் புண்படச்செய்வது தருமமாகுமா? வேண்டாமப்யா விட்டுவிடுங்கள். அநியாயமான குற்றத்தைச் சுமத்தத் துணியாதீர்கள்'' என்று கதறினான். அவன் என்ன கத்தியும் அதைக் கவனிப்போர் யாருமில்லை. எல்லோரும் தாம் பேசுவதையே பேசு கின்றார்களேயன்றி ஒருவனாவது இவன் சொல்வதைக்காதில் வாங்க வில்லை. இதற்குள் போலீஸ் ஜெவான், செல்லப்பாவைப் பார்த்து ''செய்த வேலையையும் செய்துவிட்டுக் கத்துகிறாயா? சும்மாவிரு! கள்ளனை நான் விட்டுவிடவில்லை! இதோ கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டுதா னிருக்கிறேன். நேரமாகிறது. நாங்கள் எங்கள் வேலை யைப் பார்க்கவேண்டும். உன்னிருப்பிடம், உன் பெற்றோர் பெயர், உன்பெயர் முதலியவற்றைக்கூறு'' என்றான். பெற்றோருடைய வார்த் தையை எடுக்கும்போதே செல்லப்பாவிற்குஅகங்காரம் மேலிட்டு அது அவனை வதைக்க ஆரம்பித்தது. அந்தச் சண்டாளர்களின் சதியாலோ சனையால்தான் நமக்கு இவ்வித ஆபத்தும் அவமானமும் ஏற்பட்டிருக் கின்றன; அந்தப் பாதகர்களின் பெயரை நாம் வாயினால் சொல்வதை

விட அந்தச்சத்துருக்களை இறந்துவிட்டதாகவே சொல்லிவிடுகிறேன்'' என்று எண்ணி, ''ஐயா! என்பெற்றோர்கள் என்றைக்கோநான்சிறுவனு யிருக்கும்போதே இறந்துவிட்டார்களாம். அநியாயக் குற்றம்சாட்டும் உங்களுக்கு நியாயம் விசாரிப்பதும் ஒரு முறையா?'' என்று ஆத்திரத் தோடு மனமுடைந்து தாங்கமாட்டாத துக்கமும் வெட்கமும் வயிற் றெரிச்சலும் பொங்கக்கூறினுன். இதைக்கேட்ட போலீஸாரும்கோபம் தாங்காமல் ''என்ன ஐயா! நீ செய்த காரியத்தை ஜயித்துக்கொள்ளும் பொருட்டு பெரிய பெரிய வார்த்தைகளையெல்லாம் பேசுகின்றுயா? உன்னை அநியாயமாகப் பிடித்து வைப்பதினுல் எங்களுக்கென்ன லாப மய்யா? கையும் களவுமாய் அகப்பட்டுக் கொண்டிருக்கும்போது கதை பேச வந்துவிட்டாயோ'' என்று பலவசை மொழிகளைச்சொன்னுர்கள். அன்று மாலை காந்தாமணிக்கு வந்த கடிதத்தைக் கண்ட உடனே அவன் இந்துமதவாசனையால் மனமுடைந்து விட்டான்; பின்னர் நேர்ந்த ஒவ்வொரு ஆபத்தினுலும் அவன் மனம் நிலை கலங்கியிருந்த தருணம் போலீஸாரும் மற்றவர்களும் கூறிய பலவசை மொழி களைத் தாங்கமாட்டாமல் 'ஐயோ'! என்ற கூக்குரலுடன் தன்னிலை யழிந்து மூர்ச்சையாகிக் கீழே விழுந்துவிட்டான். அவன் பிறந்து இத்தனை காலம் வரையில் வசைமொழியைச் சிறிதும் கேட்டறியாத வன். அடுத்தடுத்து நேர்ந்தமனக்கலக்கத்தில் மூர்ச்சையாய்விட்டான். உடனே போலீஸார் ஜலங்கொண்டுவந்து அவன் முகத்தில் தெளித் தார்கள். எதனுலும் செல்லப்பாவிற்குத் தெளிவுண்டாகவில்லை. பிறகு போலீஸார், நீலாமணியின் வாக்குமூலத்தைவிசாரிக்கத்தொடங்கினுர் கள். செல்லப்பா-மூர்ச்சித்திருப்பதை அங்குக் கூடியிருந்த ஜனங் கள் பார்த்ததும் ''அடடா என்ன சாகஸம்! உண்மையில் மூர்ச் சித்தவன்போல் பாசாங்கு செய்கிறுன் பாருங்கள் சார்! இந்த ஆசாமி பலே பக்காத் திருடனுக இருக்கவேண்டும். அடி விழாமலிருக்கும் போதே அடியற்ற மரம்போல் விழுந்து பாசாங்கு செய்கிறுனே! ஐயோ பாவம்! தன் கையிலகப்பட்ட நகைகளெல்லாம் போய்விட் டனவே என்று அழுது வருந்துகிறுன்போல விருக்கிறது'' என்று பல மாதிரியாகப் பேசிக்கொண்டார்கள்.

போலீஸார்:— அம்மணி! தாங்கள் திருடனை எப்போது பார்த்தீர் கள்? தங்கள் வீட்டு ஆண் பிள்ளைகளெங்கே?

நீலாமணி:—ஐயா! நான் தாசி வகுப்பைச் சேர்ந்தவள். எனக்கு வீட்டில் வேலைக்காரன்தான் ஆண் துணை. வேறு ஆண் பிள்ளைகளில்லை. நான் இன்று ஒரு கலியாண வீட்டிற்குக் கச்சேரி செய்ய மாலை நான்கு மணிக்கு முன்னமேயே போய்விட்டேன். பிறகு எட்டு மணி சுமாருக்குத் திரும்பி வந்தபோது, என் சயன அறையாகிய இந்த அறை திறந்திருக்கக் கண்டு திடுக்கிட்டேன். நான் போகும்போது இவ்வறையைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டேனுகையால் இதை யாரோ கள்ளத்தனமாய்த் திறந்திருக்கிறார்கள் என உணர்ந்தேன்; உடனே கூச்சலிட்டேன். என் வேலைக்காரன் என்னுடைய வாத்யங்களை வண்டியிலிருந்து எடுத்து வைப்பதைக்கவனித்திருந்தான். பிறகு என் கூச்சலைக் கேட்டு ஓடி வந்தான். இந்த அறையில் நானாவது அவனாவது முதலில்போகப் பயந்தோம். பிறகு எங்கள் கூக்குரலைக் கேட்டு வந்த இவர் துணிந்து உள்ளே சென்று இவனைப் பிடித்துக்கொண்டார்கள்; பிறகு நீங்கள் வந்தீர்கள், என்றாள்.

போலீஸார்:—(வேலைக்காரனைப் பார்த்து) நீ இந்தம்மாள் வெளியே சென்றதுமுதல் வீட்டில்தானே இருக்கிறாய்? உனக்குத் தெரிந்ததைச் சொல்.

வேலைக்காரன்:-சாமி! எஜமானே! நானு இம்மாத்ரம் கோயந்தே புடிச்சிக்கினு இந்த ஊட்டே வேலைசெய்யரவன் சாமி! இந்தம்மா பொரக்கத்துக்கு மிந்திம் பிடிச்சி நான் இங்கனே இருக்கிரவஞ்சாமி. நான் அப்பிடிலாம் திருட கிருட மாட்டேஞ்சாமி.

போலீஸார்:—(இடைமறுத்து) என்ன பேசுகிறாய் கையும் மெய்யுமாய்க் கள்ளனைப் பிடித்திருக்கும்போது உன்னைத் திருடியதாக யார் சொன்னார்கள்? நடந்த செய்தியைக் கூறு.

வேலைக்காரன்:—எஜமானே, நானு அத்தே சொல்லவல்லீங்க. நானு கோயந்தெம்புடிச்சி இக்கரேன்; ஒரு ஒவித்ரியமும் எனக்குத் தெரியாதீங்க. இவன் திருடிப்புட்டு இந்த ஒவித்ரியத்திலே மாட்டிக்கினானென்றேன்! இண்ணைக்கி எங்கம்மா வெளியே போன அப்பாலே செனேரந்தரிச்சி இந்த ஆள் வந்தாரு. நானு அப்பொ ரொம்ப ஷோக்கான சுருட்டு குடிச்சிகினே இந்தேனு. இவரு வந்ததும்

உள்ளே அம்மா இல்லீங்க இன்னெ. அவரு பேசாதே உள்ளே போனரு. நானு நெனச்சுகினே. அம்மாளுக்கு இந்தய்யா தெரியு மாங் காட்டியுண்ணுப்புட்டு சுருட்டு குடிச்சிக்கினே இந்தேன். அடிக் கடி அம்மாளெ தேடிக் கினுயாராச்சும் வந்திகிணெ யிருப்பாங்க. அப் புடிதான் இவனும் வந்தானுங்காட்டியுமுண்ணுபாத்தேஞ்சாமி. இவன் வந்த கொஞ்சநேரத்திற்கெல்லாம் எங்கம்மா வந்துட்டாங்க. நானு வண்டியாண்டேபோய் ஆறுமுனியன், துரும்புர்ர்ரா. இதுங்களெ கொண்டாந்து வைக்கச்சிலே அம்மா கூவினது எங்காதுலெ கேட்டிசு. ஓடனே நானும்சேந்திகிட்டு கூவினேன். அல்லாரு வந்துட்டாங்கோ. நீங்களும் வந்தீங்க. இதாஞ்சாமி எனக்குத் தெரியும்.

போலீஸார்:—ஏனம்மா! இந்த மனிதன் இதற்குமுன் இங்கு வருவது வழக்கமுண்டா?

நீலாமணி:—இவனை இன்றுதான் இப்போதுதான் புதியதாய் நான் பார்க்கிறேன். இவனுக்கும் எனக்கும் பழக்கமே இல்லை.

போலீஸார்:—(வேலைக்காரனைப் பார்த்து) ஏனேயா! இதற்குமுன் இவனை நீ பார்த்ததுண்டோ?

வேலைக்காரன்:—ஐயோ! ஒவித்ரியமே. நான்தான் சுருட்டுக் குடிச்சிகிணு இருந்தேன்ரேனே: சும்மா கேக்றீங்களே.

போலீஸார்:—நீ சுருட்டு குடித்ததை நாங்கள் கேட்கவில்லை. இந்த ஆளை இதற்கு முன் எப்போதாவது கண்டதுண்டா?

வேலைக்காரன்:—நான் பாத்திருந்தா சொல்லமாட்டேனு. எனக் குத் தெரியாதுங்கோ.

போலீஸார்:—அம்மா! இங்கு இவன் ஒரு வேலைக்காரன் தானு இன்னும் யாரேனுமுண்டோ?

நீலாமணி:—ஐயா! சமயல்காரி ஒருத்தியுண்டு.

போலீஸார்:—(வேலைக்காரனைப் பார்த்து) சமையல்காரியைக் கூப் பிடு என்றார்கள். உடனே வேலைக்காரன் சமையலறைக்குச் சென்று அங்கு படுத்திருந்த சமையல்காரியைக்கண்டு அவளை எழுப்பியுட்கார வைத்து, உரத்த குரலில், இன்லைக்கி நீ சமையல் நல்லா செயலையாம்.

அதுக்காவ ஒன்னே அம்மா போலீஸ்காரன் கையில் புடிச்சித் தரப் போராங்களாம். ஓடியா'' என்று கூவி அவள் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து இங்கு நிறுத்தினான். சமையல்காரிக்கு அப்போது வேலையொன்று மில்லாமையால் அவள் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தாள். அவளைத்தூக்கத்தில் எழுப்பிவிட்டதாலும் அவளுக்கு ஏற்கெனவே காது செவிடாகையினாலும் இவன் கூறியது தூக்கக்கலக்கத்தில் அவளுக்கு ஒன்றும் தெரியவில்லை. இவன் தன்னை இழுத்துவந்து நிற்க வைத்தது தான் தெரிந்தது. அவள் இயற்கையிலேயே வெகு நல்லகுணமுடையவள். வெகுசாது. பயந்த மனுஷி. ஆகையால் கூடத்தில் நிறையக்கூட்டமும் போலீஸ் சேவகனும் இருப்பதைப் பார்த்ததும் மோட்டார் பஸ்ஸைக்கண்டு மிரளும் நாட்டுப் புறத்து மாடுகளைப்போல் மிரளவாரம்பித்துவிட்டாள். தலைக்கு மேலே வெள்ளம் வந்துவிட்டதென்று பயந்து கலங்கினாள். அவள் தன் எஜமானியைப்பார்த்து குடல் நடுங்க வாய்குளற "அம்மணி! இவங்களுக்கெல்லாம் சமயலாவணுமுண்ணு எங்கிட்ட சொல்லிப் புட்டுப்போவலீங்களே. நானு வூட்டுவேலையெ சேஞ்சுட்டு ரவையூண்டு தூங்கிப்புட்டேண்ணு. நீங்கபோலீஸ் சேவுரு அய்யாவை இட்டார லாமா? இதோ ஒரு நிமிஜத்துலே செஞ்சுட்ரேங்க! யம்மா யம்மா இவங்களெ அனுப்பிடுங்கோ'' என்று கெஞ்சிக் கூத்தாடியதைக் கண்ட எல்லோரும் சிரித்துவிட்டார்கள். நீலாமணி அவளைப்பார்த்து "உனக்கொன்றுமில்லை; பேசாதிரு'' என்றுமெல்ல ஜாடைசெய்தாள். உடனே போலீஸ்காரன் சமையல்காரியைப் பார்த்து—"அம்மா! இன்று உங்க எஜமானியம்மாள் வீட்டைவிட்டுப்போனதற்குப் பிறகு நீ யாதாகிலும் விசேஷம் கண்டதுண்டா?'' என்றுகேட்டான். இதைக்கேட்ட சமையல்காரி "என்னயா என்னே பாத்துகிண்ணமோ கையாட்ரே மூஞ்சேயாட்ரே இண்ணமோ பண்ரயே நான் தான் சமயல் செஞ்சுபோட்ரெண்ணேனே இன்னும் என் எண்ணெ மொரட்ரே?'' என்றாள்.

இதைக்கேட்ட எல்லோரும் நகைத்தார்கள். இதற்குள் நீலாமணி போலீஸ் சேவகனைப்பார்த்து "ஐயா! இவளுக்கு காது செவிடு. சற்று உறக்கக் கூவிச் சொல்லவேண்டும்'' என்றாள். நீலாமணி தன்னைப் பார்த்துச் சேவகனிடம் ஏதோசொல்வதைச் சமையல்காரி ஜாடையா

லறிந்து கொண்டு அவளைப் பார்த்து, "எம்மா என்ன சமையல் செய்யா துண்ணு அவங்களையே சொல்லச் சொல்ரையா? சரிதான் அப்படியேசெய்யுங்க. யார் சொன்ன எனக்கென்ன? சொல்லுங்கய்யா" என்றாள்.

இதைக் கேட்ட ஜவான் நகைத்துக்கொண்டே முன்கேட்டதையே உறக்க மீண்டும் கேட்டான். சமையல்காரி தலையாட்டிக் கொண்டே "ஓ அப்படியே செய்துட்ரேனுங்க" என்றாள். இதைக் கேட்ட எல்லோரும் விலாப்புடைக்க நகைத்தார்கள். மீண்டும் ஜவான் உறக்கப் பேசத்தொடங்கி "அம்மா! இன்று மாலை நாலுமணிக்குமேல் என்ன விசேஷம் நடந்தது? உனக்குத் தெரிந்தவற்றைச் சொல்லு" என்றான்.

சமையல்காரி:—இதென்ன கேசாரமாகிதே. நானு சமையல் செய்வேனு! மாலை கட்டுவேனு! இத்னே பேருக்கும் மாலை கட்ட என்னாலே முடியுமா? நானு பூக்கார பண்டாரமில்லிங்க. அப்பிடில்லாங் கேக்காதிங்க.

போலீஸ்காரன்:—இதென்னடா வேடிக்கையா யிருக்கின்றது. இந்த முழுச் செவிட்டைவைத்துக்கொண்டு என்னமாக மாரடிக்கிறீர்கள்? (உறக்கப் பேசத் தொடங்கி) "எ செவிட்டுப் பிணமே! இன்று" என்று பேச ஆரம்பிப்பதற்குள் சமையல்காரி இடைமறுத்துப் பேசத் தொடங்கி "என்னுய்யா அப்பிடி எல்லாங் கேக்கரீங்க. சாப்பாட்டிற்குப் பணம் கேப்பாங்குன்னு பயப்பட்ரீங்களா? எங்கம்மா அப்படி பட்டவங்கல்ல. யார் வந்தாலும் சும்மா சோறு போடுவாங்க" என்றாள். இதைக்கேட்ட எல்லாரும் வயிறு வெடிக்கும்படி நகைத்தார்கள். மீண்டும் சேவகன் பேசத் தொடங்கி "இதேது கஷ்ட காலமா யிருக்கிறது. கீழே விழுந்த கள்ளனும் எழுந்திருக்கவில்லை. இவளுடன் வாக்கு மூலம் வாங்குவதற்குள் பொழுது விடிந்துவிடும்போல் இருக்கிறதே. இவன் உண்மையில் மூர்ச்சித்திருக்கிறானே அல்லது பாசாங்கு செய்கிறானே தெரியவில்லை. இவனை ஸ்டேஷனிற்கொண்டு போய்த்தான் கவனிக்கவேண்டும். அதற்குள் இன்னும் கொஞ்சம் ஜலத்தை முகத்திலடித்துப் பாருங்கள்—என்று கூறிவிட்டுச் சமையல்காரியை நோக்கி முன்னிலுமதிகமாகச் சத்தமிட்டு "இன்று சாயங்

காலம் உங்கம்மாள் பாட்டுக் கச்சேரிக்குச் சென்ற பிறகு இந்த வீட்டில் ஏதாவது விசேஷம் நடந்ததுண்டா? உனக்குத் தெரிந்ததைகூறு'' என்றான்.

இதைக்கேட்ட சமையல்காரி வெருவியப்பான பார்வையோடு எல்லோரையும் பார்த்து "இதென்னடி கேசாரமா கீது. நானு தான் சமயல் காரி இண்ணுப்புட்டு சொன்னேனே. என்னைப் பாட்டுக் கச்சேரி பண்ணுண்றீங்களே. எனக்குப் பாட்டுத் தெரியாது. கீட்டுத் தெரியாது. கேலிபண்ணுதிங்கேயா. நானு இத்னும்பேருக்கும் சமையல் செஞ்சாவுணும் நானுபோரேய்யா'' என்று கூறிக்கொண்டே அவ்விடத்தைவிட்டுப் போகப் புறப்பட்டாள். அவள் கூறியதற்கு எல்லோரும்நகைத்துக்கொண்டே அவளைப்போகவிடாமல் தடுத்தார்கள். சேவகன் மீண்டும் பேசத் தொடங்கி "இவளுக்கு ஒவ்வொரு பதமாகத் தொண்டை கிழியச் சொல்லித்தான் தெரிந்து கொள்ளவேண்டும்'' என்று கூறி, அவள் முகத்தருகில் சென்று காதோடு பேச எத்தனிக்கையில் அவள் ஓவென்று அலறி அடித்துக்கொண்டு விலகி நின்று "இதென்ன நியாயம்? எம் மூஞ்சிகிட்டவாராரே ஐயயோ! இதென்னடி அக்கூரமாகீதே'' என்று பேசிக் கொண்டே இருக்கையில் நீலாமணி தடுத்துப் போகாதிருக்கும்படி சைகை செய்து "அவர்கள் கேட்பதற்குச் சரியான பதில் சொல்'' என்று ஜாடைசெய்தாள்.

போலீஸ்:—வழக்கப்போல் உங்கள் எஜமானி இன்று வீட்டிலிருந்தார்களா? வெளியில் சென்றார்களா?

சமையல்காரி:—ஓ அப்பிடியே வயக்கப் படிதாஞ்சேரேனுங்க

போலீஸ்:—(எல்லோரும் நகைக்கின்றார்கள்) இனிமேல் என் தொண்டை வலிக்கின்றது. உன்னோடு கூச்சலிட்டு இவ்வளவு கத்திக் கத்திப் பேசுகிறேனே உன்காதில் விழவில்லையா?

சமையல்காரி:—ஓ விந்ததே! கத்தரிக்காய் தானே! கறிசெய்யட்டா?

இதைக் கேட்டதும் போலீஸ்காரனுக்குக் கோபம் வந்துவிட்டது. நீலாமணி சேவகனோடு பேசத்தொடங்கி, "ஐயா! இவள் முழுச் செவிடு. இவளிடம் நான் ஜாடையாகத்தான் பேசுவது வழக்கம். அப்படியே கேட்டுத் தெரிவிக்கிறேன்.'' என்று கூறிச் சமையல்காரியைப்

பார்த்து, "நான் வீட்டைவிட்டுச் சென்றதற்குப் பிறகு இங்கு என்ன வாவது விசேஷம் நடந்ததா?" என்று ஜாடையினுல் கேட்டாள். இதைக்கேட்ட சமையல்காரி "அம்மா! நீங்க பூட்டப்றம் நானு சமயல் செஞ்சுபுட்டு இண்ணுமந்த வேலெங்களை செஞ்சுட்டுப் படுத்துத் தூங்கினே இதான் எனக்குத்தெரியும், என்ன சமயல் செய்யர்து." என்ருள். இதைக்கேட்ட சேவகன்" "சரி. இதற்குமேல் இவளோடு மாரடைக்க யாராலுமாகாது" என்றுகூறி அங்குநடந்தவற்றையும், நகைகளின் ஜாபிதா, விலைமதிப்பு முதலியவற்றையும் குறித்து எழுதிக் கொண்டு ஒருவண்டியில் செல்லப்பாவை எடுத்துப் போட்டுக்கொண்டு நகைகளையும் எடுத்துக்கொண்டு போலீஸ்ஸ்டேஷனை யடைந்தான். போலீஸ் ஸ்டேஷனுக்கு வைத்தியரை அழைத்துவந்து செல்லப்பாவைக் காண்பித்து, அவனுடைய மூர்ச்சை தெளிவதற்குச் சிகிச்சை செய்தார்கள். வைத்தியர், செல்லப்பா அதிகமான மனக்கொதிப்பும் பயமும் கோபமும் அடைந்திருக்கிருனென்றும் அதனுல் மனமுடைந்து மூர்ச்சித்திருப்பதாகத் தெரிகின்றது என்றும் கூறி அவுடதம் கொடுத்து அதைச் செல்லப்பாவின் வாய்க்குட்செலுத்தும்படி செய்து "இன்னும் கொஞ்சநேரத்தில் எழுந்திருப்பான்" என்று கூறிச் சென்றுவிட்டார். போலீஸ் அதிகாரிகள் செல்லப்பாவைப் போலீஸ்ஸ்டேஷனில் தனியாக ஓர் அறையில் படுக்கவைத்துவிட்டு ஒரு சேவகனைக் காவல் வைத்துவிட்டார்கள். அந்தச் சேவகன் செல்லப்பாவின் மூர்ச்சை தெளியும் நேரத்தை எதிர்பார்த்திருந்தான்.

இரவு மூன்று, நான்கு மணி சுமாருக்குச் செல்லப்பா மூர்ச்சை தெளிந்து கண்திறந்தான். அப்போது அவன் மனம் தான் மயக்கத்திலாழ்வதற்கு முன்னுல் நிகழ்ந்த சம்பவத்தையே நாடகம்பார்த்துக் கொண்டிருந்தது. அவன் தான் இருக்குமிடம் தெரியாமல் சுற்றுமுற்றும் பார்த்தான்; புதுவிடத்தில் படுத்திருப்பதை அறிந்தான்; தன்னெதிரில் அன்னியனொருவன் உட்கார்ந்திருப்பதையும் கண்டான்; தன்னைக்கைதியாக்கிச்சிறையில் வைத்திருப்பதாக அப்போதே அறிந்தான். அவனுக்கு மீண்டும் ஆத்திரமும் மனக்கொதிப்பும் அநியாயமாய்த் தன்னைக் கைதுசெய்துவிட்ட அகங்காரமும் வயிற்றெரிச்சலும் ஒன்று கூடி அவனைத் துடிதுடிக்கச்செய்துவிட்டன. இவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சேவகன் இவன் கண்விழித்துக் கோபக்குறியோடும்

கலவரத்தோடும் பார்ப்பதைக்கண்டதும் 'என்ன ஐயா! மயக்கம் தெளிந்துவிட்டதா?' என்றான். இதைக் கேட்ட செல்லப்பா மெல்ல எழுந்து உட்கார்ந்து சேவகனைப்பார்த்துப் பேசத்தொடங்கி "நீர் யார் ஐயா? இது யார் வீடு?" என்று படபடத்துக் கேட்டான்.

சேவகன்:—இது போலீஸ்ஸ்டேஷன், நான் சேவகன்—என்பது உமக்குத் தெரியவில்லையா? ஏன் எதற்குக் கேட்கிறீர்?

செல்லப்பா:—நானுமப்படித்தான் நினைத்தேன். இருந்தாலும் போலீஸ் என்பது எல்லோருக்கும் நன்மை செய்யும்பொருட்டாக உள்ளதென்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நான் உண்மையில் ஒரு பாபமுமறியேன். அவ்விடம் நடந்ததை நடந்தவாறு அவர்களிடங்கூறி முறையிட்டேன். அப்பொழுது அவர்கள் என்னைப் பலவிதமான வசைமொழிகள் கூறினார்கள். உடனே எனக்குத் தாங்கமாட்டாத மனக்கொதிப்பினால் மயக்கம் வந்துவிட்டது. அது தான் எனக்குத் தெரியும். மீண்டும் இப்போதுதான் கண்விழித்தேன். ஒருகால் உண்மையைக்கேட்டு என்னை என் வீடுதியில் கொண்டுவிட்டார்களோஎன்னவோ என்றசந்தேகத்தினால்கேட்டேன்.

சேவகன்:—ஐயா! உண்மையாக நடந்திருப்பது அவ்விதமிருப்பினும் அதற்குத்தக்க ஆதாரமில்லாமலிருக்கிறதே. நீர்தான் குற்றவாளி என்பதற்குப் போதிய தடயங்கள் கிடைத்திருப்பதைத்தானே நாங்கள் சட்டப்படி எடுத்துக்கொள்ள வேண்டும். நாங்கள் நீர் சொல்வதை நம்பிச் சட்டவிரோதமாக எதுவுஞ்செய்ய அதிகாரமில்லையே. உங்களுடைய உற்றார் பெற்றோருக்கு இச்செய்தி தெரிந்தால், அவர்கள்வந்து தக்க பிரயாசைப்பட்டு நிஜக்குற்றவாளியைக் கண்டுபிடித்து விட மாட்டார்களா? ஏதோ முன்செய்த பாபம். இந்த அவதூறு கேட்க நேர்ந்ததுபோலும்—என்று கூறினான். உண்மையிலேயே அந்தச் சேவகன் பச்சாத்தாபமும், இளகிய மனமும், நல்ல சிந்தையும் பரோபகாரமுமுடைய குணசாலியாகையால், செல்லப்பாவிற்கு அநுகூலமாகவே பதிலளித்தான். செல்லப்பா இவன் சொல்லியதற்கெல்லாம் யாதொரு பதிலுமளிக்காமல் மௌனமாகவே மறுபடியும் படுத்தான்;மனதில் தான் தப்புவதற்கு எவ்விதமான உபாயம் செய்யலாம் என்றுஆலோசித்தான். "என் பெற்றோராகிய சத்துருக்களுக்குச்

சொல்வதற்கே எனக்கு இஷ்டமில்லை. நாம் அவர்களைக் கனவிலும் நினைக்கலாகாது. நமது கண்மணியாகிய காந்தாமணிக்கு இச்செய்தியைச் சொல்லியனுப்புவோமென்றால் அவள் நம்மை என்னவிதமாக எண்ணுவாளோ? நம்மருமை மாமி, மாமன் முதலியோர் என்ன சொல்வார்களோ? இந்தத் தருமசங்கடமான நிலைமைக்கு நான் என்ன செய்வேன். ஐயோ! இவ்வித சதியாலோசனை யெல்லாஞ்செய்து என்னை இக்கதிக்கு ஆளாக்க வேண்டுமென்று என் பெற்றோர்கள் எத்தனை நாளாய்ப் பகைவைத்திருந்தார்களோ தெரியவில்லையே! அன்று பத்மம், காந்தாவை ஆணு, பெண்ணு என்று கேட்டபோதே எனக்குச் சந்தேகமேற்பட்டது. அதற்குத் தகுந்தாற்போல் அவர்கள் என்னைப் பலதரம் அவ்விடத்திற்கு வரும்படி அழைத்தும் நான் செல்லாமையால் என்மேல் கடுமையான பகைகொண்டு இவ்வாறு செய்திருக்க வேண்டுமென்று திட்டமாய் எண்ணுகிறேன். அவர்கள் சதியாலோசனை செய்ததற்கு அநுகூலமாகப் பக்கத்துவீட்டிலும் திருடன்வந்து என்னை என் பெற்றோருக்கு முன்னிலையில் இவ்விதம் அவமானம் செய்யவேண்டுமா? நமக்கு இப்போது போதாதகாலத்தின் கொடுமையால் இவ்விதம் நடக்கின்றதோ? அந்தோ எனதருமைக் காந்தா! உனக்கு யாரோ என் பெற்றோர்கள் சதியாலோசனையால் எழுதியனுப்பிய கடிதத்தைக்கண்டு உண்மை யறியாமல் உன்மேல் சந்தேகங்கொண்டு உன்னை வெறுத்தேனே! அதன் பலனாகவோ எனக்கு இந்தப் படாப்பழியும் அவமானமும் பெரிய ஆபத்தும் நேர்ந்துள்ளன? ஆ! அதுதான்! அதுதான்! நான் முற்றும் ஆங்கிலேயர்களைப்போல விருந்தும் காந்தாவின் கையை வேறொருவர் முத்தமிட்டதைக்கண்டு கோபித்து வரலாகுமா? அந்த வினையே என்னை இவ்வாறு இடித்துவிட்டதோ? ஆஹா! என்கண்ணே! கண்மணி! காந்தாமணியை வெறுத்ததன் பலனை அனுபவித்து விட்டேன். ஐயோ! எனக்கு என்னுடைய இந்த நிலைமையைக் கேட்டவுடன் காந்தாமணி எவ்விதம் தத்தளிப்பாளோ? என்ன துடிதுடிப்பாளோ? அவளுக்கு என்மேலுள்ள ஆசையினால் உயிரைக்கூட விட்டாலும் விட்டுவிடுவாள். என்னவோ, இத்தர்மசங்கடத்திற்கு நான் என்ன செய்வேன்? எவ்விதமேனும் இச்செய்தி முழுவதும் பரவுவதற்குள் நாம் அவர்களுக்குத் தெரிவித்து மேலே நடக்கவேண்டிய வேலையைக் கவனிக்கவேண்

டுவது மிக அவசியமாயிற்றே!'' என்று அவன் யோசித்துக்கொண்டே இருக்கையில், சேவகன் பேசத்தொடங்கி, "என்ன ஐயா! என்ன யோசிக்கின்றீர்கள்? தங்கள் மனிதர்கள் யார் என்பதைத் தெரிவித்தால், நாங்கள் அவர்களுக்குச் செய்தியனுப்பி, வரவழைக்கின்றோம். அல்லது நீரே கடிதம் எழுதிக்கொடுத்தாலும் நாங்களவர்களிடம் சேர்ப்பிக்கின்றோம். நீர் இனித் தாமதித்தால் இன்னுமுள்ள அதிகாரிகள்வந்து பலவந்தமாகக் கேட்டறிவார்கள். இனிமேல் தாமதிக்காமல் சொல்லும்'' என்றான்.

இதைக்கேட்ட செல்லப்பா, பதில் பேசாது சற்று மௌனமாயிருந்து பின்''ஐயா! நீங்கள் ஒரு காகிதமும் இறகும் மசியும் கொண்டு வாருங்கள். நான் என் மனிதருக்குக் கடிதமெழுதித் தருகிறேன். அதை அவர்களிடம் சேர்த்துவிடுங்கள்'' என்றான். உடனே சேவகன் வெளியேசென்று காகிதம்முதலியவற்றைக் கொண்டுவந்து செல்லப்பாவிடம் கொடுத்து, ''ஐயா! தாங்கள் எழுதும் கடிதத்தை அதிகாரிகள் பார்வையிட்டுத்தான் அனுப்புவார்கள். ஆகையால் அதற்குத் தகுந்தபடி எழுதுங்கள்.'' என்றான்.

செல்லப்பா காகிதத்தை எடுத்துப் பின்வருமாறு எழுதினான்.

என் கண்மணிபோன்ற காந்தாமணிக்கு உன் அன்பன் செல்லப்பா எழுதியது—

கண்மணி! என்னுடைய சினேகிதன் வீட்டுட் டீபார்ட்டிக்காக எனக்கு அழைப்புப் பத்திரம் வந்தது. நான் நேற்று உன்னையும் அழைத்துக்கொண்டு போக எண்ணினேன். ஆனால் உன்னுடைய சினேகிதர் யாரோ ஒருவர் அச்சமயம் வந்திருந்தபடியால் நான் மாத்திரம் தனியாகப் போக நேர்ந்தது. போனவிடத்தில் என்னை ஏதோ ஆபத்திற்கு உட்படுத்த எண்ணி, என் நேசன் எழுதியதுபோல் அழைப்புப் பத்திரம் அனுப்பியதை நானறிந்தேன். சென்ற இடத்தில் யாரையும் காணுமலிருந்ததோடு நான் உட்சென்றதும் கதவு தாளிடப்பட்டது. நான் தப்பித்துக்கொள்ள வழி தேடுகையில் பக்கத்துவீட்டுக் கதவு ஒன்று தென் பட்டது. அதை நான் தட்டியவுடன் யாரோ திறந்ததுமல்லாமல் என்னை ஓர் அறையில் கொண்டு விட்டுக் கதவைச் சாத்திக்கொண்டுப் போய் விட்டான். அந்த அறையின்

பக்கத்தில் யாரோ திருடன் திருடன் என்று கூவி அனியாயமாக என்னைப் பிடித்துக் கைதுசெய்து இப்போது போலீஸ்ஸ்டேஷனில் வைத்திருக்கிறார்கள். இந்த வெட்கக் கேட்டைச் சொல்ல என் மனம் துடிக்கின்றது. கதவைத் திறந்து என்னை உள்ளே அழைத்துச் சென்றவனே கள்ளன். அவன் தப்பிக் கொள்ளும்பொருட்டு என்னை அந்த அறையில் தள்ளிவிட்டுச் சென்றான் என்றதைப் பிறகு நான் திட்டமாயறிந்தேன்.

எனதன்பே! நீ இந்தக் கடிதத்தைக் கண்டு என்னவிதமாகத் துயரப்படுவாயோ? என்ன செய்வேன் ? அடாத பழிக்கு ஆளாகும்படியாக எனக்குத் தலைவிதி இருந்தது பார்த்தாயா? கண்ணே காந்தா! நான் உனக்குச் சொல்லவேண்டுவது ஒன்றுமில்லை. நீ நன்றாகப்படித்த அறிவாளி யாகையால் நீ இச்சமயம் துயரத்தைச் சகித்துக்கொண்டு இதற்கு மேலே யாகவேண்டிய காரியத்திற்கு உன் தந்தையுடன் யோசித்துச் செய்ய முன் வருவாய். இந்தவித ஆபத்தும் இவ்வித அவமானமும் உண்டாக்க எந்தப் பாவிகள் மனந் துணிந்தார்களோ தெரியவில்லை. காந்தா ! என்னருமைக் காந்தா ! இதைப்பற்றி நான் அதிகமாக எழுதுவது அனுவசியம். நீ உடனே உன் தந்தையுடன் இவ்விடம் வரவேண்டும். இந்தப் படாப்பழியை விலக்கநீயும் உன் தந்தையும் தான்கதி. கண்ணே! உன் வரவையே எதிர் பார்க்கிறேன். மனம் வருந்தாதே. இந்த எதிர்பாராத ஆபத்து நேர்ந்திருப்பது பகைவர்களின் சதியாலோசனை என்பது உனக்குக் கூறாமலே விளங்கும். அதிகம் எழுத முடியவில்லை. உடனே வரவும் எனக்கிப்பொழுதிருக்கும் மனநிலைமையில் நான் என்ன எழுதுவது? என்ன எழுதுகிறேன் என்பதுகூட எனக்குத் தெரியவில்லை. இக்கடிதத்தை உன் தந்தைக்குக் காண்பி. அவருக்குத் தனியாய் எழுத எனக்கு மனம் தவிக்கின்றது. எல்லாவற்றையும் நீயே யோசித்துச் செய்வாயென நம்பி உனக்கே கடிதம் அனுப்புகிறேன்.

இப்படிக்கு:
உன்னைக் கனவிலும் மறவாத,
அன்பன் செல்லப்பா

அக்கடிதத்தைச் சேவகனிடம் கொடுக்க அவன் அதை அதிகாரியிடம் காண்பித்தான். அதிகாரி அதைப் படித்துவிட்டு அவன் கடிதத்திற்கு

உரையொன்று எடுத்துக்கொடுத்தார். அதைச் சேவகன் எடுத்துக் கொண்டு வந்துசெல்லப்பாவிடம் கொடுத்தான். செல்லப்பா மேல்விலா ஸம் எழுதிச் சேவகனிடம் கொடுத்துவிட்டு அடையாற்றுப் பங்களா வின் அடையாளமும் தெரிவித்தான். அதைக் கேட்டுக்கொண்ட சேவ கன் அந்த அறையை வெளியில் பூட்டிக் கொண்டு துவிசக்கரவண்டியி லேறி அடையாற்றை நோக்கிச் செல்லலானான்.

* * * *

அடையாற்றுப் பங்களாவில் செல்லப்பா சென்ற பிறகு அவர்கள் போஜன வேளை நெருங்கிய சமயம் செல்லப்பாவைத் தேடவாரம்பித் தார்கள். அவனைப் பங்களாவில் காணவில்லை. எட்டுமணிக்கு போஜனம் செய்வதைத் தள்ளி ஒரு மணி வரையில் பார்த்தார்கள். அப்போதும் செல்லப்பாவைக் காணாமையால் அவர்களுக்குச் சற்று யோசனையுண் டாயிற்று. "அவன் நம்மிடம் சொல்லிக்கொள்ளாமல் எங்கும் சென்ற தில்லையே; இன்று மாத்திரம் சாயந்திரமுதல் காணவில்லையே; ஒரு கால் தனது சிநேகிதன் வீட்டிற்குச் சென்றிருப்பானோ என்னவோ? அப்படித்தா னிருக்கவேண்டும். இன்னேரம் அவன் போஜனம் செய் திருப்பான். நாமும் போவோம் போஜனத்திற்கு" என்று அங்குள்ள மூவரும் முடிவுசெய்துகொண்டு போஜனம் செய்து பின் சற்றுநேரம் பார்த்தார்கள்; அப்போதும் வராமையினால் படுத்து நித்திரையிலாழ்ந் தார்கள்.

பொழுது விடியுமுன்னம் போலீஸ் ஜவான் துவிசக்கர வண்டி யோடு பங்களாவையடைந்து கதவைத்தட்டினான். பணிமக்கள் கேட்டைத் திறந்தார்கள். போலீஸ் ஜவானைக்கண்டதும் அவர்கள் பயந்து நடுநடுங்கி, நாத்தடுமாற ஜெவானைப் பார்த்து "ஐயா! நீங் கள் யாரைத்தேடுகிறீர்கள்?" என்றார்கள்.

சேவகன்:—நான் காந்தாமணியம்மாளுக்குக் கடிதம் கொண்டுவந் திருக்கிறேன். அந்தம்மாளைக் கூப்பிடுங்கள்-என்று கூறியவாறே முன் கட்டு வாயிலையடைந்தான். இதைக்கேட்ட வேலைக்காரர்கள் மிகவும் பயந்துபோய் நடுக்கத்துடன் உட்சென்று காந்தாமணியி னறைக் கதவை தட்டிக் காந்தாவை எழுப்பிச் செய்தியைத் தெரிவித்தார்கள். காந்தாவும் கண்களைத் துடைத்துக்கொண்டு கலவரத்துடன் வீதியில்

வந்து ஜவானைக்கண்டு கடிதத்தை வாங்கிக்கொண்டு "தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? தங்களிடம் இதை யார் கொடுத்தார்கள்?" என்று ஆங்கிலத்தில் கேட்டாள்.

சேவகன்:—நான் போலீஸ்ஸ்டேஷனிலிருந்து வருகிறேன். விவரமெல்லாம் அதில் காணலாம். கடிதம் செல்லப்பா என்பவர் கொடுத்தனுப்பினர்—என்றான்.

இதைக்கேட்டதும் காந்தாவிற்குச்சற்று சந்தேகம்தோன்றவாரம்பித்தது. அவள் உடனே உள்ளேசென்றுகடிதத்தைப்பிரித்துப்படிக்கத்தொடங்கினாள். அதைப் படிக்கும்போதே அவளுக்கு ஒருவிதமான கலவரமும் செல்லப்பாவிடத்தில் அலக்ஷியமும் வெறுப்பும் திடீரென்று தோன்றிவிட்டன. அதைமுற்றும் படித்துப்பார்த்த பிறகு "உம்திருட்டு வேலை செய்துவிட்டு ஜெயிலில் சென்ற மனிதன் உண்மையில் குற்றமற்றவனாக விருந்தாலும் அவனிடத்தில் மதிப்பு எவ்விதம் இனிமேல் உண்டாகும்? அவனுக்கு இழிவான சொல் வந்துவிட்டதை இனி மாற்ற முடியுமோ? என் தந்தையின் மதிப்பிற்கும் கௌரவத்திற்கும் இந்த மனிதன் இனிமேல் கண்ணியப்படமாட்டான். திருட்டு மனிதன் என்று ஜெயிலில்போய் உட்கார்ந்து இவன் வெட்கமில்லாமல் எங்களை ஒத்தாசைக்கும் அழைக்கின்றானே. இந்த வெட்கக்கேட்டை நம் தாய் தந்தையர்க்குத் தெரிவிக்காமலிருப்பதே நலம். நானாகவே அவனைவெறுத்து விலக்கிவிட்டதாகச் சொல்லிவிடலாம். ஆகையால் இக்கடிதத்தை தந்தைக்குக் காட்டாமலேயே ஒருபதில் எழுதி அனுப்பிவிடுவோம்" என்று யோசனை செய்துகொண்டு பின்வருமாறு கடிதமெழுதலானாள்.

ஐயா! முதலில் உன்னை யோக்கியனன்று நம்பி உன்னிடம் பழகியதே சுத்தப் பிசகென்று இப்போது தோன்றுகின்றது. சில தினங்களாகவே உன்னிடம் எனக்கு வெறுப்பு உண்டாய் விட்டது. நானுன்னை இனி சிநேகிதனாக எண்ணமாட்டேன். நீ உண்மையில் குற்றமற்றவனானாலும் சரி, குற்றவாளியானாலும் சரி உனக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. நாங்கள் உனக்கு உதவி புரிய முன் வரமாட்டோம். உன் திருட்டுச் சகவாசமே எங்களுக்கு

வேண்டியதில்லை. இனிமேல் கடிதமனுப்ப வேண்டாம். அப்படி யனுப்பினல் நாங்கள் பதிலுமனுப்ப மாட்டோம். உனக்கு உதவிசெய்ய எங்களுக்கு இஷ்டமில்லை.

இப்படிக்கு,
காந்தாமணி.

மேற்படி கடிதத்தை உரையிலிட்டுச் சேவகனிடம் கொடுத்தனுப்பிவிட்டுத் தனது பணிமக்களை நோக்கி இந்தச் சேவகன் வந்த விவரத்தை யாரிடமும் சொல்ல வேண்டாமென்று திட்டம் செய்துவிட்டுப் படுத்துவிட்டாள்.

கடிதத்தை வாங்கிச்சென்ற சேவகன் ஸ்டேஷனையடைந்துஅதை செல்லப்பாவிடம் கொடுத்தான். செல்லப்பா வெகு ஆவலுடன் பதிலை எதிர்பார்த்திருந்தபடியால், உடனே ஆத்திரத்துடன் கடிதத்தைப் பிரித்துப் படிக்கலானன். ஆஹா! அந்தக் கடிதத்திலுள்ள விஷயத்தைப்படித்த செல்லப்பா அப்படியே இடியோசையைக் கேட்ட நாகம் போல் துடித்து விழுந்து சோர்ந்துவிட்டான்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182833
சென்னை 600 008


**இனாம்!** **இனாம்!**

# முற்றிலும் இனாம்!

'C' ரிஜிஸ்டர்! 'C' ரிஜிஸ்டர்!

டைம்பீஸ் டைம்பீஸ்

**இனாம்,** **இனாம்,**




எங்களின் " தாரா " லீவர் 18-காரட்டு ரோல்டுகோல்டு பாக்கட் கடியாரம் பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்டதை வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக்கடியாரத்தில் உள்ள டையலின் பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிட்டிருக்கிறது. முந்துங்கள்.

**காப்டன் வாச் கம்பெனி, தபாற்பெட்டி நெ 265, மதராஸ்.**

---


ஒருமாதம்

# பாதிவிலை! பாதிவிலை!

வரையிலும்

அசல் விலை ரூபாய் 14.

பாதி விலை 7.




ஸ்வான் ஹவுஸ்

தபால் நெ, 508, பி, டி. மதராஸ்.

22 காரட் ரோல்டு கோல்டு கைக்கெடியாரம் 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயும், இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பிவைக்கப்படும். பாதி விலை ரூ 7. ஒவ்வொரு கெடியாரமும் ஒரு பட்டு பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

# "கிருஷிகன்"

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள:—

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு

பென்ஷண்ட் விவசாய டேப்டி டைரெக்டர்

(2) J. R, ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்று தான்.

சௌமியஞு சித்திரைமீ முதல் எட்டு வருஷகாலமாய் தேதி தவறாமல் பிரதி தமிழ்மீ முதல் தேதிகளில் "கிருஷிகன்" வெளிவந்துலாவியதும், அப்போது நடந்த "பெரும் ஐரோப்பிய சண்டையில்" யுத்தம் புரிந்து வந்த ராணுவ வீரருக்குக் காய் கரிகள் பயிரிட்டு கொடுப்பதற்காக சர்க்காராரின் வேண்டுகோளுக் கிணங்கி கிருஷிகன் பத்திரிகாசிரியரான ஸ்ரீமான் J. R. ரங்கராஜா அவர்கள் மெஸபிடோமியாவுக்குப் போவதெனத தீர்மானித்து சந்தாதாரருக்கு முன் கூட்டி அவ்விஷயத்தைத் தெரிவித்ததோடு சந்தாதாரருக்குப் பாக்கியன்னியில் பத்திரிகை யனுப்பி விட்டு பின் நிறுத்திய விஷயம் சந்தா நேயர்கள் அனைவரும் அறிந்ததே. அப்பால் பத்திரிகாசிரியருக்கு ஏற்பட்ட பல சங்கடங்களாலும், காகிதக் கிரைய உயர்வாலும் பத்திரிகை மறுபடியும் துவக்க வில்லை.

சென்னை விவசாய டிபார்ட்மெண்டில் மிகக் கியாதியாய் 30 வருஷங்களுக்கு மேல் வேலை செய்து வந்ததற்காக கவர்ண்மெண்டாரால் ராவ்பஹதூர் பட்டம் அளிக்கப் பட்டவரும், தமிழ் ஜில்லாக்களிலுள்ள "கிருஷிகன்" நண்பர் என எல்லோராலும் மதிக்கப் படுபவருமான ஸ்ரீமான் ராவ்பஹதூர் ஜெ, செல்வரங்க ராஜா அவர்களும் பததிரிகாசிரியராய் இருப்பதாய் ஒத்துக்கொண்டதால் இவ்விரு பத்திரிகாசிரியர்களின் ஆதீனத்தின் கீழ் முன்னிலும் மேன்மைப் பட்டு விளங்குமென்பதில் சந்தேகமில்லை.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும "கிருஷிகனு"க்குச் சமானமான பத்திரிகை கிடையவே கிடையா தெனபது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிபபடுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

"கிருஷிகன்" அக்ஷயஞு சித்திரைமீ முதல்தேதி முதல் வெளிவந்திருக்கிறது, வி. பி. மூலமாய அனுப்பினுல்ரிஜிஸ்ட்ரேஷன் கூலிசேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர்செய்து தஙகள் பேர்களைப பதிவு செய்து பத்திரிகை பெற்று கொள்ளுங்கள்.

மானேஜர் "கிருஷிகன்" ஆபீஸ்,

"ஜேகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

## குறைந்த சந்தாவில் நடைபெறும் உயர்ந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

# எது?

முன்னிலும் பெரிய அளவில்
திருச்சியினின்று வெளியாகி வரும்

## “நச்சினார்க்கினியன்” தான்.

நாவல், நாடகம், வியாசம், விநோதக்கூற்று, சிறுவர்க்காகும் கதைகள் விடுகதை, விடுவிப்பு வினாக்கள், வெளிவராத நூல்கள், ஒன்றையொன்றிகழாச் சமயக்கொள்கைகள், இந்துதேச சரித்திரக்கதைகள், சைவ வைணவ புராண இதிகாசக்கதைச் சுருக்கம், தமிழ் நூலாராய்ச்சி, சமாசாரக்கொத்து, பரீக்ஷை வினாக்கள், பிறமொழி, நூல்மொழிபெயர்ப்பு, இனிய செய்யுட்கள் முதலியன இதில் வெளிவரும்.

வருட சந்தா ரூ 2 தான். வெளிநாடுகளுக்கு ரூ 2 8 0

**விளம்பர விகிதம்**:—பக்கத்திற்கு ரூ, 5 அரைப்பக்கத்திற்கு ரூ, 3 நீடித்த விளம்பரங்களுக்கு சகாய விகிதம்.

இப்பத்திரிகையின் சந்தாதாரர்க்குரிய நலங்களைப் பத்திரிகையிற் காண்க, மாதிரிப்பிரதி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்புக.

**பண்டித - ம. கோபால கிருஷ்ணையர்,**
பத்திராதிபர், “நச்சினார்க்கினிய நிலயம்”
“தெப்பக்குளம் போஸ்ட்.”

---

## காமதேனு,

### ஓர் உயர்தர மாதாந்திர தமிழ்ப்பத்திரிகை.

பிரதி பௌர்ணமியிலும் வெளிவரும்.

கிராமமுன்னேற்றத்திற்குரிய முக்கிய விஷயங்கள், ஐக்கிய இயக்கம், கிராம பஞ்சாயத்துகள், விவசாயம், வியாபாரம், பிரதமக்கல்வி முதலிய எல்லாவிஷயத்தையும் கிராமவாசிகளுக்கு சொற்பசந்தாவில் தெரிந்துகொள்ளும்பொருட்டு இதை நடத்திவருவதால் எல்லாகிராமவாசிகளும் ஐக்கியஸ்தர்களும் இதை ஆதரிக்கவேண்டுகிறோம். சந்தா வருஷம் 1-க்குரூபாய் 1—8—0 முனபணமாகக் கட்டவேண்டும். விளம்பர விகிதங்களுக்கு பத்திராதிபருக்கு எழுதித்தெரிந்துகொள்ளவும்.

R. ஆனந்தராவ், “காமதேனு” பத்திராதிபர்,
திருத்தங்கல், சிவகாசி மார்க்கம்.

---

## ஆனந்த போதினி.

தமிழ் நாட்டில் பழமையும் புதுமையும் வாய்ந்ததும், 20000-சந்தாதாரர்களுடையதுமான மாதப் பத்திரிகை இது ஒன்றே. இதற்கு 12-வது வருடம் இப்பொழுது நடக்கிறது. இதுவரையில் சந்தாதாரராய்ச் சேராதவர்கள் இப்பொழுதே சேருங்கள். பிரதிமாதமும் 48-பக்கங்களுள்ளவிஷயங்களுடன் இது வெளிவரும்.

வருடசந்தா இந்தியா, பர்மா, சிலோன் முதலியவற்றிற்குத் தபாற் செலவு உள்பட ரூ. 1. வெளி நாடுகளுக்கு ரூ 1-4-0

**ஆனந்த போதினி ஆபீஸ், மதருஸ்.**

# லோகோபகாரி.

## முப்பத்திமூன்று ஆண்டுகளாய் நிலவும்

## வாரப் பத்திரிகை.

பத்திராதிபர்: —பரலி - சு. நெல்லையப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிரும் புது வாழ்வும் பெறுவதற்காகப் பாடு பட்டு வரும் வாரப் பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். சிறந்த பாடல்களும், சித்திரப் படங்களும் அவ்வப்போது வெளிவரும். பாரத தேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று, லோகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பதே லோகோபகாரியின் நோக்கம். உலகத்தில் அற நெறியும் அன்பு நெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங் காலமாக உழைத்துவருகிறது. இதனைத் தமிழ்மக்கள் ஆதரிக்கவேண்டும்.

வருஷ சந்தா ரூபாய் நாலு. வெளி நாட்டுக்கு ரூபாய் ஆறு.

மாதிரிப் பிரதி இனாம்.

காரியஸ்தர்,

**லோகோபகாரி பத்திரிகாலயம்,**

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

---

## ரக்ஷையும் மந்த்ர சக்தியும்

துரதிஷ்டத்தையகற்றி சுகஜீவனத்தை நாடுவோர்க்கு அவசியமானவை.

| | ரூ. | அ. |
|---|---|---|
| கௌரவம், தனம், கல்வி பெருமைக்கு | 7 | 8 |
| ஆரோக்கியம், சரீரபலம் பெற | 7 | 8 |
| வாக்சாதுர்ய சக்திக்கு | 7 | 8 |
| நீதிவிவகார கெலிப்புக்கு | 10 | 0 |
| விளையாட்டு,பந்தயம் சீட்டு | 7 | 8 |
| விவகாரங்களில் ஜயிக்க | 10 | 0 |
| மாதரிடம் ஆடவரன்பு பெருக | 7 | 8 |
| ஆடவரிடம் மாதரன்பு பெருக | 10 | 0 |
| ஆடவராயினும் ஸ்திரீயாயினும் முறையே வசீகரித்துக்கொள்ள | 7 | 8 |
| நல்ல மாசூல் அறுவடையாக | 7 | 8 |
| ரப்பி ஸாலமனின் ரக்ஷை | 15 | 0 |
| ஜயவீர ஹீப்ரூவினு லணியப் பெற்ற ரக்ஷை இரண்டாவது ரகம் | 21 | 0 |
| முதலாவது ரகம் | 30 | 0 |

குறிப்பு:—மணியார்டராவது கவர்ண்மெண்ட் கர்ரென்ஸி நோட்டாவது அனுப்பினால்,வீட்டிற்கே நேராக ரக்ஷை வந்து சேரும். ரக்ஷைவேண்டுவோர் முழுக்கிரயத்தையும் அட்வான்ஸாக அனுப்பி விடவேண்டும். வி. பி. யில் அனுப்ப முடியாது.

D. A. RAMA DUTH,

Astrologer

*No. 30 and 55*

*Chekku St.*

COLOMBO, (Ceylon),

நயம் !   வெகு நயம்

உயர்தரமான பம்பாய் கெட்டிச் சாயமுள்ள

# கலர் புடவைகள்.

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்கவை. கெம்பு ரோஸ், கருப்பு, ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி. அளவு $18 \times 2\frac{3}{4}$ முழங்கள்.

## கெட்டி சாயம்! உயர்ந்த உடை!! விலை நயம்!!!

முதல் ரகம் விலை ரூ. 5-8-0; 2-வது ரகம் ரூ. 4-8-0 பூக்கொடிக் கரை செய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0 அதிகம்.

## ஜர்மன் சில்க் புடவைகள்

**பிளைன்:** மயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு, முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும்; பெங்களூர் முந்தாணி போட்டது; கலர்கெடாது; மனோகரமான மழமழப்பு; பளபளப்பு மாறாது; ரம்மியமான தோற்றமுள்ளது, நேர்த்தியான நெசவு கொண்டது; நீடித்து நிற்பது; உறுதியானது; அளவு $18 \times 2\frac{3}{4}$ முழங்கள். விலை ரூ. 12-8-0. ரவிக்கை துண்டு 1-க்கு 12 அணா.

**கோட்டடி:** கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக்கொடி, தந்திக் கம்பி, டில்லி தர்பார், முதலிய தினுசுகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| $18 \times 2\frac{3}{4}$ | விலை | 13 | 8 | 0 |
| ரவிக்கை 1 | முழம் | 0 | 14 | 0 |

மேற்படி பிளைன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலைப்பிலும் ஜரிகை (கருக்காதது) வேலை செய்த உருப்படி 1-க்கு 3-8-0 அதிகம்.

## ஏஜெண்டுகள் தேவை.

குறிப்பு:—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம்; ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால்பங்கு முன்பணமனுப்புக. தபால் கூலி வேறு.

லிட்டி நெசவுச் சாலை,

65, அரமனைக்கார வீதி, ஜி. டி. சென்னை.

---

# கம்மபாலன்

பிரதி தமிழ் மாதக் கடைசியில் வெளிவரும் ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. பொது விஷயங்களும் கம்மகுல முன்னேற்ற விஷயங்களும் வெளிவரும். கிராமவாசிகளுக் கின்றியமையாதது. வருட சந்தா தபாற் செலவுட்பட ரூபாய் ஒன்றுதான். மிகக் குறைந்த சந்தா. விளம்பரங்களுக்கு ஏற்றது. நீண்டகால விளம்பரங்களுக்குக் குறைந்த விகிதமுண்டு. முன் பணமனுப்புதல் வேண்டும். மற்றும் விவரங்களுக்கு எழுதுங்கள்.

ஆர். வெங்கடசாமி நாயுடு,

பத்திராதிபர் "கம்மபாலன்" திருத்தங்கல். சாத்தூர்

இனும்! ஒரு அணு ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு இனும்!!

ஸ்ரீமான் வ. கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்கள் எழுதிய

# போலீஸ்கிலி பொதி ராயர்

சிரிப்பைத்தரும் துப்பறியும் நாவல்.

இதில் கபிற்றைக்கண்டு பாம்பெனப் பயப்படும் போலீஸ்புலி படும் திண்டாட்டம் படிக்கப்படிக்க ஓயாச் சிரிப்பைத்தரும்.

வத்ஸா கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.

---

# மதனசிங்கர்

## அல்லது

## உரிமை இழந்த சீமான்.

(திருத்தமான இரண்டாம் பதிப்பு.)

இந்த துப்பறியும் அபூர்வமான செந்தமிழ் நாவலை படிக்கத் துவக்கியவர்கள் முடிக்கிறவரையில் வேறெவ்விதமான அவசர வேலைகளிருப்பினும் அவைகளை மறந்து, இந்த நாவலிற் செறிந்துள்ள சொற்சுவை பொருட்சுவைகளால் வசியமாக்கப்பட்டு, வாசித்து முடித்த பின்னரே அவைகளைக் கவனிக்கச்செய்யும் என்பது நிச்சயம். விலை ரூ 1 4 0.

---

# சுந்தரவதனி

## அல்லது

## தர்மமே ஜெயமளிக்கும்.

இது ஓர் அதியற்புத சிங்காரமான காதல்ததும்பும் துப்பறியும் தமிழ் நவீனம். படித்தவுடன் திடுக்கிடச்செய்து, மனதைக் கவரும் ஆச்சரிய சம்பவங்களாலும், ரகஸ்யக் கடிதங்களாலும் நிறையப்பெற்றது. விலை அணு 12.

வசந்த சமுத்திரம் அல்லது இரண்டு ஜெகன் மோகினிகள்.

இந்த இனிய துப்பறியும் நாவலில் துப்பறியும் சிங்கமாகிய ஸிம்ஹளநாதர் தாம் முன்னமே காதலித்த வசந்தமாலை என்பவளை வேறொரு திருடன் காதலிப்பதும் ஜயசிங் என்னும் பரதேசி வருதலும், திலகசமுத்திரம் தோன்றி சில விஷயங்களை உரைத்தலும், ஸிம்ஹள நாதரை கொலைசெய்ய முயற்சிப்பதும் இந்நாவலின் கண் ரஸக்குறைவு படாமல் ஆரம்ப முதல் முடிவுவரையில் படிப்பதற்குத் தூண்டும் இயல்புடையதாக எழுதியிருக்கிறது. விலை 0 12 0

# Tamilian Residents of Calcutta !

We have pleasure in informing that

MR. R. VASUDEVAN
c/o "CAPITAL" LTD.,
Post Box No. 14,
CALCUTTA.

has kindly consented to act as our Honorary Representativs there. He is authorised to collect subscriptions and grant receipts on our behalf. This arrangement will save unnecessary postal expense to our intending subscribers. Copies of the journal can be had from him.

JAGANMOHINI OFFICE,
26, Car Street, Triplicane,
Madras.

MR. V. KRISHNASWAMY,
22. Veljee Lukamjee Building
Matunga, Bombay.

P. Ramalinga Chettiar, Stamp Vender
Tirupapuliyur, Cuddalore.


---

## அறிவிப்பு

மூன்றாவது சஞ்சிகையில் வெளியான விடுகதையின் பரிசு கீழ் கண்டவர்க்கு விழுந்திருக்கிறது.

ஸ்ரீமதி T. செல்லம்மாள்,
ஸ்ரீரதபுரம்.

# அமிர்தாஞ்சனம்

அமிர்தாஞ்சனம்

சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10 ரூ. 0-10-0




## 1927 காலண்டர்கள் 1927

பிரபல சித்திர வேலைக்காரரால், மூன்று வர்ணங்களில்
மோஹினிப்படம் வரைந்துள்ளது.

படம் ஒன்றுக்கு ரூ. 0—2—0.

டஜன் ரூ. 1—4—0. 100 ரூ. 9—12—0.

சிறிய அளவு லக்ஷ்மி காலண்டர்

டஜன் ரூ. 0—8—0. 100 ரூ 3—8—0.

(தபால் பாக்கிங் சார்ஜ் வேறு).

உடனே முந்துங்கள்

**மோஹினி தைலம்.**

பாட்டில் 1-க்கு 0—12—0

படைமருந்து
டப்பி 1-க்கு 0—6—0

பல்பொடி
டப்பி 1-க்கு 0—2—0

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

**அமிர்தாஞ்சன் டிபோ,**

7. தம்புச்செட்டி வீதி, சென்னை.

Edited and Published by V. M. Parthasarathy Iyengar,

PRINTED AT THE 'NOBLE PRESS,' TRIPLICANE, MADRAS S.E.